# சட்டமும் நீங்களும்
# LAW AND YOU






## குடியியல் சட்ட விளக்கங்கள்
## Understanding the Civil Laws

# 13

CPPHR

# சட்டமும் நீங்களும்
# (LAW AND YOU)

13

## குடியியல் சட்ட விளக்கங்கள்
## Understanding the Civil Laws

தொகுப்பாக்கம்:

K.G. John
ATTORNEY-AT-LAW

இலவச வெளியீடு:

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

# முன்னுரை

"சட்டமும் நீங்களும்" எனும் 11ஆம்,12ஆம் புத்தகங்கள் ஏற்கனவே வெளியாகி வாசகர்களின் கைகளில் உலவி வருகின்றது. வாசகர்கள் இச்சிறு கைநூல்களில் காட்டும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் CPPHR மிகவும் வரவேற்கின்றது. இனி தொடர்ந்து வெளிவரவிருக்கும் இவ்வருடத்திற்குரிய கைநூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவியை வழங்கிக் கொண்டிருக்கும் USAid – SPICE நிறுவனத்திற்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடம் "சட்டமும் நீங்களும்" என்ற கைநூல்கள் குடியியல், குற்றவியல் பற்றிய சில கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவரவுள்ளன. அதனுடைய முழுநோக்கமும் பொதுமக்களிடையே சட்டஅறிவையும் விழிப்புணர்வையும் வெளிப்படுத்துவதேயாகும்.
இவ்வருட கைநூல்களில் வெளிவரவுள்ள ஆக்கங்களை தொடர்ந்தும் சட்டத்தரணி K.G.John அவர்கள் வழங்க உள்ளார். சட்டத்தரணி K.G.John அவர்கள் வீரகேசரி பத்திரிகையின் வாசகர்களுக்கு புதியவர் அல்ல. சட்டம் பற்றிய அவருடைய கருத்துக்கள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் வீரகேசரி பத்திரிகையில் வெளிவருகின்றன.

அக்கட்டுரைகளை தொகுத்து கைநூல் வடிவமைப்பில் வெளியிடுவதற்கு அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கிய சட்டத்தரணி K.G.John அவர்களுக்கு CPPHR தன்னுடைய முழு நன்றியையும் கூறுகின்றது. பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள் நாளடைவில் வாசகர்களின் கையிலிருந்து நழுவிப் போவது சகஜமே. எனவே கட்டுரை ஆசிரியரின் நோக்கத்தையும் கருத்திலெடுத்து கைநூல் வடிவில் வடிவமைத்து வாசகர்கள் நீண்ட தூரப்பயனடைவதற்கு எம்முயற்சி வழிவகுக்கும் என நம்புகின்றோம். விஷேட விதமாக வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் தன்னுடைய பத்திரிகையின் ஊடாக சட்டத்தரணி K.G.John அவர்களுடைய ஆக்கங்களை வெளியிட்டு பொது மக்களுக்கு விலைமதிக்க முடியாத சேவையினை ஆற்றுகின்றமைக்கு CPPHR தன்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இக்கைநூல்கள் ஆர்வம் மிக்க வாசகர்களுக்கும் பொது நல சேவையாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவைகள் நூலகங்கள், சட்டமாணவர்கள், சட்டவிழிப்புணர்வுகளை கொண்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவைபோன்று பொதுநல எண்ணக்கருத்துக்களை கொண்ட நிறுவனங்களையும் வாசகர்களையும் சென்றடைவதே எமது நோக்கமாகும்.

இக்கைநூல்கள் கிடைக்கும் இடம்:- மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும்
பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல. 238, உட்துறைமுக வீதி, திருகோணமலை.
தொலைபேசி எண்: 026-3260895.
E-mail: cpphrtrinco@gmail.com.

"அறிவு உன்னை விடுவிக்கும்"

# Foreward

Already "Law & You" booklets Nos. 11 and 12 had been released and it is in circulation.

CPPHR is appreciative for the support and enthusiasm shown by the readers of "Law & You". The grant has been approved by USAid – SPICE to continue the publication of the next series.

The aim is to enhance awareness and knowledge of law among people.

Mr. K.G. John will continue to contribute in the writing of articles pertaining to criminal and civil laws.
Mr. K.G.John, Attorney – at – Law is the author for this series. Mr. K.G. John is well known among the readers of Virakesari, the Tamil daily News Paper. His articles on law features on Wednesdays in the Virakesari.

CPPHR is ever grateful to Mr.K.G. John for his full support in granting permission to bring in his articles in booklet forms which have already been published. Since, the news paper articles usually tend to get lost easily, the booklet form will be much more effective to carry foreward the intention of the author. CPPHR appreciates the Editor, Virakesary who had been providing this valuable service to the public.

These booklets will be distributed free of charge to all who are interested. It will reach libraries, law students, NGOs working in law awareness programmes and like minded organizations etc.

The booklets will be available at,
Centre for Promotion & Protection of Human Rights, 238, Inner Harbour Road, Trincomalee.
Phone No. 026-3260895. E-mail: cpphrtrinco@gmail.com.

**"knowledge sets you Free"**

# பொருளடக்கம்

1. மரணச் சொத்து வழக்குகள்

2. சிவில் வழக்கில் வழக்காளி அல்லது எதிராளி இறந்தால் என்ன நடக்கும்.

3. உண்மையான சொந்தக்காரனை விட சட்டவிரோதிக்கு போஷாக்கு ஊட்டவே ஆரம்ப நீதிமன்றச்சட்டம் உதவுகிறது

4. காதல் திருமணம் தடைப்பட்டால் நிவாரணம் பெற முடியுமா?

01

## மரணச் சொத்து வழக்குகள்

குழந்தை ஒன்றை பெற்றெடுக்கும் பெற்றோர் முதலில் எண்ணுவது அக்குழந்தைக்கு என்ன பெயரை இடுவது. ஏந்த தெய்வத்தின் அல்லது சமயத் தலைவர்களின் அல்லது சமூகம் போற்றும் நல்லவர்களின் பெயர்களை இட வேண்டுமென்றேயாகும். அதன் பின்னர் அக்குழந்தையை செல்வந்தனாக்க வேண்டுமென்றும், டாக்டராகவோ எஞ்சினியராகவோ வேறு அதை ஒத்த நிலையில் உள்ள தொழிலுக்கான படிப்பை படிப்பிக்க வேண்டுமென்றும் எண்ணுவதும் உண்டு. இவை தவறு அல்ல.

ஆயினும், இவை அனைத்தும் நிறைவேறிய பின்னரும் அவர்கள் பிற்காலத்தில் அந்த பிள்ளையின் நன்மைக்காக செய்ய வேண்டிய முக்கிய தேவையை செய்யாமல் இருப்பதுண்டு. அந்த முக்கிய தேவைகளில் ஒன்று அந்த பிள்ளையின் பெற்றோர் தாம் இறந்த பின்னர் தமது சொத்து யாருக்குச் செல்ல வேண்டும் என்று எழுதாமல் இறப்பதாகும்.

இதற்கு காரணம் தமது சொத்து எப்படி கையாளப்பட வேண்டும் என்று கூறுகின்ற சட்டம் பற்றி தெரிந்தும் தெரியாமல் இருப்பதாகும். எல்லா நன்மைகளை பிள்ளைக்கு செய்தும் முக்கியமான சட்டத் தேவையை அவர்கள் செய்யாமல் விடுவதால் அந்த பிள்ளை பல வருடம் நீதிமன்றம் ஏற வேண்டியேற்படுகிறது. ஆகவே ஒவ்வொருவரும் தாம் வாழும் காலத்திலேயே தமது சொத்துக்கள் பற்றிய உயிலை எழுதுவது அவசியம். இல்லையேல் பல கஷ்டங்களை சந்திக்க வேண்டிவரும். இன்று நாம் பார்க்கப் போவது அது சம்பந்தமான வழக்குகளையேயாகும்.

**மரண சாசன வழக்குகள்**

மரண சாசன வழக்குகள் பற்றிய சட்ட ஏற்பாடுகள் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. 1993 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க குடியியல் சட்டக் கோவையில் இதனைக் காணலாம். இதற்கு சில திருத்தங்கள் 2010 ஆம் ஆண்டு செய்யப்பட்டுள்ளன. முக்கிய திருத்தங்கள் 525 ஆம் பிரிவிலும் 528 ஆம் பிரிவிலும் 545 ஆம் பிரிவிலும் காணப்படுகின்றன. 525 ஆம் பிரிவில் செய்யப்பட்டுள்ள திருத்தம் என்னவெனில் இறந்தவரின் மரணச் சொத்து 5 இலட்சத்திற்கு மேற்பட்டதாக இருந்தால் நீதிமன்றம் செல்ல வேண்டும் என்பது திருத்தத்தின்படி 40 இலட்சத்திற்கு மேற்பட்ட சொத்தாக இருந்தால்தான் நீதிமன்றம் செல்ல வேண்டும் என திருத்தப்பட்டுள்ளது.

528 ஆம் பிரிவின்படி உயில் இல்லாமல் இறக்கும் ஒருவரின் சொத்தில் தனக்கும் பங்கு உண்டு என்று கூறுபவர் மரண சாசன நிருவாக தத்துப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்பவருக்கு அதனை வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்தால் அந்த எதிர்ப்பை நீதிமன்றத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்ற திருத்தமாகும். 545 ஆம் பிரிவின் திருத்தப்படி சில விடயங்களில் நிருவாக பத்திரம் பெறுபவர்கள் மாற்றம் செய்ய முடியாது என்பதாகும். (No transfer to be effected in certain cases) என கூறப்பட்டுள்ளது. மேற்கூறிய பிரிவுகள் தற்போது அமுலில் உள்ளன. அவற்றுக்கு அமையவே நீதிமன்றங்கள் தீர்ப்புக்களை வழங்குகின்றன.

**<u>மரணச் சொத்து வழக்குகள்</u>**

மரணச் சாசன வழக்குகளை இரண்டு பிரிவுக்குள் அடக்கலாம். ஒன்று இறுதி விருப்பாவணம் உள்ள வழக்கு இதனை உயில் உள்ள வழக்கு என்று கூறலாம். இறந்தவர் தனது சொத்துக்கு என்ன நடக்க வேண்டும் என நொத்தாரிஸ் முன்னிலையிலும்

இரண்டு சாட்சிகள் முன்னிலையிலும் நிறைவேற்றிய உயில் (will) சம்பந்தமான வழக்கு இரண்டாவது மரண சாசனம் எழுதாமல் (will இல்லாமல்) திடீரென இறப்பவர்களது சொத்து சம்பந்தமான வழக்கு. இரண்டு வழக்குகளும் மாவட்ட நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும்.

## இறுதி விருப்பாவன வழக்கு

இந்த வழக்கு உயில் வைத்திருப்பவரால் தாக்கல் செய்யப்பட வேண்டும். எந்த நீதிமன்றத்தில் என்பது பின்வருமாறு அமையும். அதாவது மரண சாசனத்தை கண்டு எடுப்பவர் அல்லது வைத்திருப்பவர் எந்த மாவட்டத்தில் வசிக்கின்றாரோ அந்த மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது மரணம் அடைந்தவர் எந்த மாவட்டத்தில் இறந்தாரோ அந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்திற்கு காண்பிக்க வேண்டும் அல்ல்து சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு காண்பிப்பது அல்லது சமர்ப்பிப்பது மரணம் எய்திய தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் நடைபெற வேண்டும். இக்கால எல்லைக்குள் புறநடைகளும் உண்டு. அத்துடன் சில தகவல்களையும் சத்திய கடதாசி மூலம் நீதிமன்றத்திற்கு கொடுக்க வேண்டும். சத்திய உரை கொடுக்காத சமயத்தவர்கள் உறுதியுரையை கொடுக்கலாம்.

சத்திய கடதாசி அல்லது உறுதியுரை பின்வருமாறு அமைய வேண்டும்.

## சத்திய கடதாசியின் படிவம்

1)................என்ற இடத்தில் 201.....ஆம் ஆண்டு .....மாதம்......ஆம் திகதியன்று இறந்தவரான .......

என்ற இடத்தைச் சேர்ந்த (பெயரை குறிப்பிடவும்)....நான் நன்கறிந்திருந்தேன்.

2) சொல்லப்பட்ட (பெயரை குறிப்பிடவும் ......என்பவர் 201......ஆம் ஆண்டு.....மாதம்.....ந் திகதியிடப்பட்ட அவரது இறுதி விருப்பாவணத்தை முறையாக எழுதி நிறைவேற்றினார்.

3) சொல்லப்பட்ட (பெயரை குறிப்பிடவும்) என்பவர் சொல்லப்பட்ட அவரது விருப்பாவணத்தை எனது கட்டுக்காப்பில் வைத்திருந்தார்.

(சிலவேளை இறுதி விருப்பாவணம் கண்டு எடுக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரத்தை கூற வேண்டும்)

4) சொல்லப்பட்ட மரண சாசனக்காரர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இயல்பினதும் பெறுமதியுடையதுமான ஆதனத்தை (விடயத்திற்கு ஏற்றால் போல்)...... நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் விட்டுச் சென்றுள்ளார். (அல்லது இவ்வுரையில் ஆதனம் எதனையும் விட்டுச் செல்லவில்லை.

5) சொல்லப்பட்ட விருப்பாவணத்தை நான் முன் வைக்கின்றேன் முறைசார்ந்த சத்தியவாக்கியம் இங்கு இருக்க வேண்டும்.

................

(ஒப்பம்)

எனது முன்னிலையில்

சமாதான நீதிவான்-சத்தியப் பிரமாண ஆணையாளர்.

**மரண சாசன அதிகாரப் பத்திரத்தை யாருக்கு வழங்க வேண்டும் என்பது பற்றியது**

மரண சாசன அதிகாரப் பத்திரத்தை பெறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கும் போது அவர்களுக்கிடையே முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஒரு நிறைவேற்றினரது அல்லது அவருடைய அற்றோனித் தத்துவக்காரரினது உரிமைக் கோரிக்கை மற்றெல்லோருடைய உரிமைக் கோரிக்கைகளிலும் பார்க்க முந்து உரிமை பெற வேண்டும். பல வழக்குகளில் தர்க்கிக்கப்படும் விடயம் என்னவெனில்,

மரண சாசனப் பத்திரத்தில் இறந்தவர் தான் இறக்கும் முன்னர் தனது சொத்துக்கு நிறைவேற்றுனர் ஒருவரை நியமிப்பதால் அந்த நிறைவேற்றுனரை புறத்தொதுக்க நீதிமன்றத்திற்கு முடியுமா?என்பதாகும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் நீதிமன்றம் நல்ல காரணத்திற்காக இதனை மாற்றலாம். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்ற மேன்முறையீட்டு வழக்கொன்றில் CA No:761/26F இறந்தவரால் பெயர் குறிக்கப்பட்ட நிறைவேற்றுனர் இரண்டு வருட காலமாக அந்த இறுதி விருப்பாவணத்தை நிறைவேற்றக்கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யவில்லை. நிறைவேற்றுனர் இறந்தவரின் நண்பராவார். இவரது செயலால் இறந்தவரின் குடும்பத்தினர் பாதிக்கப்பட்டனர். ஆகவே அவர்கள் நிருவாகத் தத்துவப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தனர். இச் சந்தர்ப்பத்திலேயே மேற்படி முரண்பாடு ஏற்பட்டது. இறுதியில் இவ்வழக்கு சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

இன்னுமொரு வழக்கில் இறந்தவரது இறுதிக் காலத்தில் இறந்தவர் தனது சகோதரியுடன் வசித்தார். இதனால் அவர் சகோதரியின் தகாத செல்வாக்குக்குட்பட்டு தனது சகோதரியை

நிறைவேற்றுனராக நியமித்திருந்தார் எனத் தர்க்கிக்கப்பட்டது. அவர் இறந்தபின்னர் சகோதரி நிறைவேற்றும் பத்திரத்திற்கு விண்ணப்பித்தபோது இறந்தவரின் மனைவி தனக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கோரினார். இறுதியில் இவ்வழக்கு சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.இவ்வாறு மரண சாசன அதிகாரப் பத்திரத்தைப் பெற முரண்பாடுகள் எழும் போது மாவட்ட நீதிமன்றம் நீதியான ஒரு தீர்மானத்தை எடுக்கலாம்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் கைம்பெண்ணின் அல்லது தாரம் இழந்தவரின் உரிமைக் கோரிக்கையை நல்ல காரணத்திற்காக பின்தள்ளி வைத்து தீர்ப்பும் வழங்கலாம்.

மரண சாசன அதிகாரப் பத்திரத்திற்கு விண்ணப்பம் செய்யும் ஒருவர் யாராவது அதனை எதிர்ப்பர் என எண்ண இடமில்லை என்று கண்டால் அவர் அந்தப் பொருள்பட்ட சத்தியக்கடதாசியை தமது மனுவுடன் இணைத்து ஆள் எவரையாவது எதிர்வாதியாக பெயர் குறிக்காது விடலாம் இல்லையேல் எதிர்வாதி மனுவில் குறிப்பிடப்பட வேண்டும்.

உயில் ஒன்றை விட்டுச் சென்றவர் சம்பந்தமாக நடைபெறும் விதிகளே மேலே கூறப்பட்டுள்ளன. இனி மரண சாசனமொன்று எழுதாது எவரேனும் ஆள் இறக்கின்ற போது அல்லது மரண சாசனம் எழுதியும் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும் போதும் இலங்கையில் ஆதனத்தை விட்டு இறக்கின்ற போதும் என்ன செய்ய வேண்டும் எனப் பார்ப்போம்.

**மரண சாசனம் எழுதாமல் ஆள் இறந்தால் என்ன நடக்கும்?**

இக்கட்டுரையின் முகவுரையில் நான் கூறியது போல் தனது சொத்து யார் யாருக்கு செல்ல வேண்டும் என்று எல்லோரும் உயில் எழுதுவதில்லை. அநேகமானவர்கள் பின்னர் உயிலை எழுதுவோம் என நினைத்து இருந்து திடீரென

மரணமாவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பத்தில் அவரது சொத்துக்கு என்ன நடக்கும் என பார்ப்போம்.

இறந்தவரின் மரணச் சொத்தை நிருவகிக்க வேண்டும் என அக்கறை கொண்டுள்ள ஆளெவரும் நிருவாகத் தத்துவப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களும் நிருவாகத் தத்துவப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கலாம். அல்லது இறந்தவரின் எவரேனும் மரபுரிமையாளர்கள் அதாவது இறந்தவரின் மரணச் சொத்துக்கு வழியுரிமையாளராக வர உரித்துடையவர்கள். மரபுரிமையாண்மை சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். (certificates of Heirship )

இந்த விண்ணப்பம் விண்ணப்பகாரர் வசிக்கின்ற அல்லது இறந்தவர் மரணம் அடைந்த நேரத்தில் வசித்தல் அல்லது இறந்தவரின் ஏதேனும் காணி அமைந்திருக்கின்ற மாவட்டத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். பெர்னாண்டோ எதிர் பெர்னாண்டோ என்ற வழக்கில் சட்டபூர்வமானவர் என்ற பிரச்சினை விண்ணப்பத்திற்கு அவசியமில்லை என விவாதிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் செய்பவர் இறந்தவருக்கு சட்டபூர்வமாக பிறக்கவில்லை என்று கூறியதை நீதிமன்றம் ஏற்கவில்லை.

**விண்ணப்பம் செய்யும் முறை**

மரணச்சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரத்திற்கு அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழுக்காக மாவட்ட நீதிமன்றத்திற்கு செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் மரணம் எய்திய திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செய்யப்பட வேண்டும். இது மனு மூலமாகவும் சத்தியக் கடதாசி மூலமாகவும் செய்யப்படுதல் வேண்டும். பின்வரும் முறையில் அந்த மனு இருக்க வேண்டும்.

அ) மரண சாசனம் இல்லை என்று கூற வேண்டும்.

ஆ) மரணம் எய்தியவரின் இறப்பு பற்றி கூற வேண்டும்.

இ) மனுதாரரின் அறிவுக்கெட்டிய வரை மரணமெய்தியவரின் மரபுரிமையாளர்கள் யார் யார் எனக்கூறப்பட வேண்டும்.

ஈ) மரணமெய்தியவரின் ஆதனங்கள் பற்றிய விபரம் கூறப்பட வேண்டும். வங்கிக் கணக்குகள் வேறு சேமிப்புகள் உட்பட கூற வேண்டும்.

உ) மரணச் சொத்தின் பொறுப்புக்கள் பற்றிய விபரம் கூறப்படல் வேண்டும்.

ஊ) மரணச் சொத்தின் கடன் தருநர் பற்றிய விபரங்கள் கூறப்படல் வேண்டும்.

எ) மனுதாரர் என்ன தன்மையில் இவ்விண்ணப்பத்திற்கு விண்ணப்பிக்கிறார் என்றும் அதனை நியாயப்படுத்தும் நிகழ்வுகளும் கூறப்பட வேண்டும்.

ஏ) மரபுரிமையாளர்கள் உடன்படின் மரபுரிமையாளர்கள் ஒவ்வொருவரும் பெறுவதற்கு உரித்துடைய ஆதனத்தின் பங்கு கூறப்பட வேண்டும்.

முக்கியமாக இம்மனுவில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்: பின்வருமாறாகும்.

1) விண்ணப்பக் கூற்றுக்களை நிரூபிக்கும் சான்றுகள். ஊதாரணமாக: மரணச்சான்றிதழ் இறந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையேயுள்ள உறவைக் காட்டும் பத்திரங்கள் என்பன போன்றவை.

2) விண்ணப்பத்தில் இறந்தவரின் உறவினரை எதிர்வாதிகளாகக் காட்ட வேண்டும்.

3) விண்ணப்பத்தை யாரும் எதிர்க்க மாட்டார்கள் எனக் கண்டால் அதனை காட்டும் சத்தியக் கடதாசி

நிர்வாக தத்துவ விண்ணப்பத்திற்கு ஒப்புதல் கொடுக்காத உறவினர் யாராவது இருப்பின் அவர்கள் நேரடியாக நீதிமன்றத்திற்கு தங்களது எதிர்ப்புக்கான காரணத்தை அறிவிக்க வேண்டும் என்று 2010 ஆம் ஆண்டு திருத்தம் கூறுகிறது. அத்திருத்தம் பின்வருமாறாகும். ஆனால் அவர்களது பெயர் மனுவில் இருக்க வேண்டும்.

"உறவினர்கள் யாராவது எதிர்வாதிகளாக குறிக்கப்பட்டு அவர்கள் விண்ணப்பதாரரின் நிருவாகத் தத்துவப் பத்திரக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க மறுத்தால் அவர்கள் தமது எதிர்பார்ப்பை அறிவித்தல் கொடுக்க வேண்டிய காலப்பகுதி நீதிமன்றத்திற்கு நேரடியாக அறிவிக்க வேண்டும். திகதி நீதிமன்றத்தால் வெளியிடப்படும் அறிவித்தலில் இருந்து எடுக்கலாம்" இந்த ஒப்புதல் கொடுக்க மறுக்கும் கடிதம் மாவட்ட நீதிமன்றத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். நீதிமன்றம் பின்னர் இது சம்பந்தமாக விளக்கம் நடத்தும்.

இன்னுமொரு பிரிவின்படி மாவட்ட நீதிமன்றம் நிருவாக தத்துவப் பத்திரத்துக்கான விண்ணப்பம் ஒன்று தனக்கு கிடைத்துள்ளது என்று அறிவித்தலை பத்திரிக்கையில் வெளியிட்ட பின்னரும் விசாரணைக்கு முன்னரும் மரணச் சொத்தில் அக்கறையுடையவரான ஆளெவரேனும் அவர் மனுவில் பெயர் குறிக்கப்படாத ஆளாக இல்லாத விடத்தும் மனுதாரரின் உரிமைக்கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து விண்ணப்பதாரருக்கு நிருவாக தத்துவப்பத்திரம் வழங்கக்கூடாது என கேட்டு தடை அறிவிப்பு (caueats) ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

ஆகவே நிருவாகத் தத்துவத்திற்கு விண்ணப்பிப்பவர் மரபுரிமையாளர் ஒருவரை எதிர்வாதியாக குறிப்பிடாமல் விட்டால் அவர் தடையறிவிப்பை கோரலாம். அதேபோல் விண்ணப்பத்தில் எதிர்வாதியாக குறிக்கப்பட்டவர் ஒப்புதல் கொடுக்க மறுத்தாலும் அதனை நீதிமன்றத்திற்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கலாம்.

இவ்வாறு ஒரு நிர்வாகத் தத்துவப் பத்திரத்திற்கான விண்ணப்பம் கடுமையாக்கப்பட்டதற்கு காரணங்களில் ஒன்று தகாத செல்வாக்கு, போலி உறவு முறை, கள்ள ஆவணங்கள் என்பன போன்றவற்றை காட்டி நிருவாகத் தத்துவத்தை பெற்று உண்மையில் இறந்தவரின் சொத்து கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்காமல் போனதேயாகும். கூட்டுச் சதி மூலம் சில உறவினர்கள் மட்டும் சொத்தை எடுப்பதும் உண்டு. இதை தடுக்கவுமாகும்.

ஆகவே புதிய திருத்தத்துடன் எதிர்வாதியும் மனுவுக்கு உடன்பட்டுள்ளார் என்று கூறுவதை நீதிமன்றம் மிக்க கவனத்திற்கு எடுக்கும் நிலை தற்போது உள்ளது.

ஒரு நிருவாக தத்துவ பத்திரம் சம்பந்தமாக எதிர்ப்பு வந்தால் அதனை நீதிமன்றம் விசாரிக்க வேண்டும். இறுதியில் தீர்ப்பு வழங்க வேண்டும். அத்தீர்ப்பு மேன்முறையீட்டுக்கு உட்பட்டது.

## நிர்வாகத் தத்துவக்காரர்களுக்கு எதிரான வழக்குகள்

நிருவாகத் தத்துவப் பத்திரம் பெறுபவர்கள் மரண சொத்துக்காரனால் நியமிக்கப்பட்டவர் அல்லர். நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவர்கள்.

## கரூஸ் எதிர் பாத்துமா வழக்கு

ஆகவே அவர்கள் மரணச் சொத்தை நீதிமன்றத்தின் அனுமதியின்றி விற்பனை செய்ய முடியாது என கரூஸ் எதிர்

பாத்துமா என்ற வழக்கில் தீர்க்கப்பட்டது. நீதிமன்றத்திடம் இருந்து விசேட அனுமதி பெற வேண்டும்.

**விக்கிரமசேகர எதிர் பெர்னாண்டோ வழக்கு**

நிருவாகத் தத்துவப் பத்திரம் பெற்றவர் மரணம் எய்தியவருக்கு வர வேண்டிய நிலுவைகளை வசூலிக்க வேண்டும். அவ்வாறு வசூலித்த பணத்தில் 1/2 பங்கு இறந்தவரின் மனைவிக்கும் மரணமெய்தியவரின் கடன்களை தீர்த்த பின்னர் கிடைக்க வேண்டும் என்று விக்கிரமசேகர எதிர் பெர்னாண்டோ வழக்கில் தீர்க்கப்பட்டது.

**அப்புஹாமி எதிர் சில்வா**

நிருவாகத் தத்துவப் பத்திரம் மட்டுப்படுத்தப்படாத ஒன்றாக இருந்தால் நிருவாகத்தத்துவப் பத்திரத்தை பெற்றவர் இறந்தவரின் காணி நிலங்களை விற்கலாம் என அப்புஹாமி எதிர் சில்வா வழக்கில் தீர்க்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தால் நீதிமன்றத்தின் அனுமதியின்றி நிலங்களை விற்க முடியாது.

பருவமடையாதவர்களின் பங்கை நிருவாக தத்துவப்பத்திரம் பெற்றவர்கள் நீதிமன்ற அனுமதியில்லாமல் விற்க முடியாது. விற்ற பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். நிருவாகத் தத்துவம் பெற்றவர் இறந்தவரின் சொத்துக்களின் பெறுமதியையும் செலவையும் எடுத்துக் காட்டும் இறுதி கணக்குப் பட்டியலை காட்ட வேண்டும். இதில் மரணச் செலவு மற்றும் செலவுகள் வங்கிக் கணக்குகள் எல்லாம் காட்டப்பட வேண்டும்.

**மரணச் சொத்து அதிகாரப் பத்திரம் சம்பந்தமாக நீதிமன்றம் வழங்கக் கூடிய கட்டளைகள்**

1) மரணச் சொத்து அதிகாரப் பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் நீதிமன்றம் இறந்தவரின் மரணச் சொத்தில் உள்ள ஆதனம் எதனையும் விற்பனை செய்வது அவசியம் எனக் கருதினால் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்த அனுமதியை வழங்கலாம். ஆனால் கணக்குகாட்டப்பட வேண்டும்.

2) விற்பனை தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலமானதாயின் நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அந்த விற்பனை இருத்தல் வேண்டும்.

3) மரணச்சொத்து நிருவாகப் பத்திரம் தற்காலிகமானதாக வழங்கப்படும் போது நிருவாக தத்துவபத்திரத்தை பெற்றவர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்ப்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் மரணச் சொத்தை பங்கீட்டு அளிக்கும் உரிமை அவருக்கு இல்லை.

4) நிருவாக தத்துவப் பத்திரத்தை நீதிமன்றம் ரத்துச் செய்யலாம்.

02

**சிவில் வழக்கில் வழக்காளி அல்லது எதிராளி இறந்தால் என்ன நடக்கும்.**

சாதாரணமாக வழக்கொன்றை தாக்கல் செய்தால் அவ்வழக்குக்குரிய தீர்ப்பு வழங்க பல மாதங்கள் அல்லது வருடங்கள் செல்வது என்பது யாவரும் அறிந்ததே. ஆகவே, வழக்கொன்றை தாக்கல் செய்து தீர்ப்பு பெறுவதற்கிடையில் வழக்காளி அல்லது எதிராளி இறந்தால் அந்த வழக்கை தொடர்ந்தும் நடத்த சட்டம் அனுமதித்தால் அந்த வழக்கை தொடர்ந்து நடத்தாமல் நிறுத்த எதிராளியால் முடியாது என சிவில் நடவடிக்கை முறை சட்டத்தின் 392 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கொன்றில் வழக்காளிகளில் ஒருவர் அல்லது எதிராளிகளில் ஒருவர் இறந்தால் அந்த வழக்கில் மேலும் வழக்காளிகள் உயிருடன் இருப்பின் அல்லது எதிராளிகள் உயிருடன் இருப்பின் எதிராளிகள் சுருக்க முறையில் அவ்வழக்கில் இறந்து போனவரின் பிரதிநிதியாக ஒருவரை நியமித்து வழக்கை நடத்த வேண்டும் என்று கேட்கவும் அதற்கு அனுமதி அளிக்கவும் வேண்டும் என சிவில் நடவடிக்கை முறை சட்டத்தின் ஏற்பாடுகள் தெரிவிக்கின்றன.

**சில வழக்குகளின் தீர்ப்புகள்**

**1981 ஆம் ஆண்டு 2 ஆம் ஸ்ரீலங்கா சட்ட அறிக்கை 232 ஆம் பக்கம் The Mahakalanda Housing Company LTD vs Dulilamomal என்ற வழக்கு.**

இவ்வழக்கில் எதிராளிகள் பலர் இருந்தனர். இதில் ஒரு எதிராளி இறந்துபோகும் சந்தர்ப்பத்தில் வழக்காளி மேற்படி வழக்கை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது ஏனைய எதிராளிகளுக்கு எதிராகவென்றும் இறந்துபோன எதிராளியின்

சட்டபூர்வமான பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டுமென்பது மேற்படி சிவில் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் கீழ் அவசியமில்லை எனவும் நீதிமன்றம் தீர்த்தது.

இதற்கு காரணம் மேற்படி பிரிவில் உள்ள "Alone" என்ற சொல்லாகும் என்றது. ஆகவே மேற்படி பிரிவை அறிய வேண்டும்.

(393) if there be more plaintiffs or defendants than one and any of them dies, and if the right to sue on the cause of action survives to the surviving plaintiff or plaintiffs Alone or Against the surviving defendants alone ….. என்று இருப்பதால் alone என்பதால் கருதப்படுவது என்னவெனில் உயிருடன் இருக்கும் ஒரு வழக்காளியோ அல்லது உயிருடன் இருக்கும் ஒரு எதிராளியோ என்பதால் இறந்துபோனவரின் சட்டப்பிரதிநிதி நியமனம் செய்ததன் பின்னர் தான் வழக்கை விளங்க வேண்டுமென்பதில்லை என்று தீர்க்கப்பட்டது. The use of the word in section "alone" in section 393 of the civil procedure code is merely for the purpose of indicating that the surviver should be entitled to sue or be liable to be sued independently without any other party being joined என்று உள்ள இதனைக் காட்டுகிறது என்று நீதிமன்றம் கூறியது.

இந்தியன் சிவில் விசாரணை முறைச் சட்டத்தின் கட்டளை 22 இல் இது மிகத் தெளிவாக இருக்கிறது. அக்கட்டளையின் இரண்டாம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட வாதிகள் அல்லது தற்காப்பினர் (defendents) இருக்கின்றனர். அவர்களில் எவரேனும் மரணம் அடைகின்றனர். அப்போது வழக்காடும் உரிமை உயிருடன் உள்ள மற்றும் வாதிகள் அல்லது தற்காப்பினர் ஆகியோரால்

தொடர்ந்து நடத்தத்தக்கதாக இருப்பின் அதனை நீதிமன்றம் வழக்குக் கோப்பில் பதிவுசெய்ய வேண்டும்.

அந்த வழக்கு உயிருடன் உள்ள வாதி அல்லது வாதிகளின் மூலம் அல்லது அத்தகைய தற்காப்பினருக்கு எதிராக நடத்தப்பட வேண்டும் என்கிறது. இதிலும் இறந்தவரின் சார்பில் சட்டப் பிரதிநிதி நியமிக்கப்படவேண்டும் என்று கூறப்படாதது கவனிக்கப்பட வேண்டும்.

**மேற்படி வழக்கின் நிகழ்வுகள்**

மேலே கூறிய இலங்கை வழக்கில் வழக்காளி மூன்று எதிராளிகளுக்கெதிராக வழக்கை தாக்கல் செய்திருந்தார். இது பங்குடமை (partnership) சம்பந்தமான வழக்காகும். ஒரு எதிராளி இறந்ததும் வழக்காளி ஏனைய இரண்டு எதிராளிகளுக்கு எதிராகவும் வழக்கை முன்னெடுக்க விண்ணப்பித்தார். 2ஆம் 3ஆம் எதிராளிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இறந்துபோன முதலாம் எதிராளியின் சட்டப்பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்படும் வரை வழக்கை விசாரிக்க முடியாது என கூறினார். நீதிமன்றம் அதனை ஏற்று வழக்கை சட்டப் பிரதிநிதி நியமிக்கப்படும் வரை வழக்கை பின்போட்டது.

மேற்படி கீழ் நீதிமன்ற தீர்ப்பில் அதிருப்தியுற்ற வழக்காளி மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் முதன் நிலை நியாயாதிக்க நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்ததுடன் வழக்காளிக்கு 2ஆம் 3ஆம் எதிராளிகளுக்கு எதிராக வழக்கைக் கொண்டுநடத்த முடியும் என்று தீர்த்தது.

**வாசகர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியது வழக்கெழு காரணம் தொடர்ந்து இருக்கிறதா? என்பதை பொறுத்தே மேற்படி பிரிவு செல்லுபடியாகும் என்பதாகும்**

மேற்படி தீர்ப்பில் இரண்டு முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும். வழக்காளி தரப்பில் அல்லது எதிராளி தரப்பில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் இறந்தாலும் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உள்ள வழக்கெழு காரணம் (cause of action) தொடர்ந்து இருக்க வேண்டும். இறந்தவருடன் வழக்கெழு காரணம் இல்லாமல் போனால் தொடர்ந்து ஏனையவர்களால் வழக்கை நடத்தமுடியாது என்பதாகும்.

**வழக்கெழு காரணம் இல்லாமல் போனால் வழக்கை நடத்த முடியாது**

ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினர் இருந்து வழக்கை நடத்தும்போது இறந்தவரின் வழக்கெழு காரணம் முடிவடைந்தால் அவரது சட்டப்பிரதிநிதி நியமிக்கப்படும் பட்சத்தில் அவ்வழக்கெழு காரணம் மீண்டும் எழும் எனக் கண்டால் சட்டப்பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்ட பின்பே வழக்கை நடத்த நீதிமன்றம் அனுமதியளிக்க வேண்டும். ஆகவே சட்டப்பிரதிநிதி யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். இறந்துபோனவரின் மரணசாசன அதிகாரம் பெற்றவர் (probate ) அல்லது மரணச் சொத்து அதிகாரம் பெற்றவர் (Letters of administration) மட்டுமேயாகும். இது 40 இலட்சம் பெறுமதியான சொத்துகளையுடையவருக்கே பொருந்தும். 40 இலட்சத்திற்கு குறைவானவரின் சட்டப்பிரதியாக அவரது வழியுரிமையாளராக உள்ளவர் வருவார். இவர்களையே நீதிமன்றம் சட்டப் பிரதிநிதியாக எடுக்க வேண்டும். ஆகவே,

I. சிவில் நடவடிக்கை முறை சட்டக்கோவையின்படி ஒன்றுக்கு மேற்பட்ட வழக்காளிகள், எதிராளிகள் இருந்து அவர்களில் ஒருவர் இறந்தால் வழக்கெழு காரணம் தொடர்ருமாயின் சட்டப்பிரதிநிதி ஒருவர் நியமிக்காமலேயே உயிருடன் இருப்பவர்களே வழக்கை நடத்தலாம்.

II. இறந்தவருடன் வழக்கெழு காரணம் முடிவடைந்து சட்டப்பிரதிநிதி நியமிக்கப்படும் பட்சத்தில் வழக்கெழு காரணம் மீண்டும் தொடருமாயின் கூட்டுப்பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் வழக்கைத் தொடர வேண்டும்.

**வழக்காளி ஒருவர் மட்டும் இருந்து அவர் இறந்தால் என்ன நடக்கும்?**

இது பற்றி சிவில் நடவடிக்கை முறைச்சட்டத்தின் 395 ஆம் பிரிவு தெளிவாகக் கூறுகிறது. அதன்படி ஒரு வழக்கில் ஒரு வழக்காளி மட்டும் இருந்து அவர் இறந்தவுடன் அந்த வழக்கின் வழக்கெழு காரணம் தொடர்ந்து இருக்குமாயின் இறந்தவரின் சட்டப் பிரதிநிதியாக தன்னை ஏற்றுக்கொண்டு வழக்கை நடத்த அனுமதிக்குமாறு ஒருவர் கேட்கலாம். நீதிமன்றம் அதனை குறித்துக்கொண்டு அவருக்கு வழக்கை நடத்த அனுமதி அளிக்கலாம். எவர் ஒருவரும் மேற்கூறியவாறு விண்ணப்பம் செய்யவில்லை என்றால் நீதிமன்றம் அவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

மேலும் வழக்காளி இறக்கும் வரையும் எதிராளி அந்த வழக்கிற்கு செலவு செய்த பணத்தை கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடவும் வேண்டும். அந்த பணத்தை இறந்துபோனவரின் சொத்தில் இருந்து எடுக்கலாம் எனவும் கூறவேண்டும். அல்லது எதிராளியின் வேண்டுகோளின்படி வேறு நிபந்தனைகளுக்கு அமைய அந்த வழக்கின் இறுதித் தீர்ப்பையடைய நடவடிக்கையை எடுக்க நீதிமன்றம் கட்டளையிடலாம்.

**சட்டப்பிரதிநிதி யார் என்பதில் பிரச்சினை எழுந்தால் என்ன நடக்கும்.**

ஒரு வழக்கில் இறந்து போனவர் சார்பில் யாரை சட்டப்பிரதிநிதியாக நியமிக்க வேண்டும் என்ற பிரச்சினை எழுகின்ற போது சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 397 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பிரிவின்படி மேற்படி வினாவிற்கு முன்னுரிமை கொடுத்து அதன் பின்னரே பிரதான வழக்கை விளங்க வேண்டும் என்பது கவனிக்கத்தக்கது.

**சட்டப்பிரதிநிதி யார் என்பதை நீதிமன்றம் எவ்வாறு தெரிவு செய்கிறது.**

சட்டப் பிரதிநிதி யார் என்பதை தெரிவு செய்த வழக்குகள் சிலவற்றைப் பார்த்தால் அவற்றில் இருந்து ஒரு பொதுவான எண்ணத்தை நாம் கொள்ளலாம்.

**பாரிசும் மற்றவர்களும் எதிராக பிறிஜட் பெர்னாண்டோ 1992 1 ஸ்ரீலங்கா புதுச்சட்ட அறிக்கை**

இவ்வழக்கில் சிவில் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 392 ஆம் பிரிவும் 404 ஆம் பிரிவும் நன்கு ஆராயப்பட்டது. இப்பிரிவுகளிலேயே சட்டப் பிரதிநிதியை தெரியும் முறைக்கான வழிகாட்டலை நீதிமன்றம் பெறலாம் என்பதால் அப்பிரிவுகளை நீதிமன்றம் மேற்படி வழக்கில் ஆராய்ந்தது.

**இந்த வழக்கில் நிகழ்வுகள் பின்வருமாறாகும்.**

போதலகே ஜுலியன் பெர்ணாந்து என்பவர் தனது காணியில் இந்த வழக்கின் எதிராளிகள் வசிப்பதற்கு இடம் கொடுத்திருந்தார். பின்னர் அந்த அனுமதியை இரத்துச்செய்து எதிராளிகளை இக்காணியின் நின்றும் வெளியேறுமாறு அறிவித்தல் கொடுத்தார். எனினும் எதிராளிகள்

அக்காணியினின்றும் வெளியேற மறுத்ததால் ஜூலியன் அவர்கள் மேல் வழக்குத் தொடுத்தார். வழக்கில் வழக்காளி தரப்பு சாட்சியங்கள் முடிவுற்று எதிராளிகளின் சாட்சியான நில அளவையாளரின் சாட்சி முடிவுற்றதன் பின்னர் மீண்டும் விளக்கத்திற்கு திகதி குறிக்கப்பட்டது. விளக்கத்திற்கான திகதி வருவதற்கிடையில் வழக்காளி காலமானார். வழக்காளியின் மகளான பிறிஜெட் இந்த வழக்கின் விடயப்பொருளான காணி தனது தகப்பனாரால் தனக்கு கொடை அளிக்கப்பட்டது என்றும் இதனால் சிவில் நடவடிக்கை முறைச்சட்டத்தின் 404 ஆம் பிரிவின் கீழ் தான் அந்த வழக்கை கொண்டு நடத்துவதற்கு அனுமதியளிக்கும்படி விண்ணப்பித்தாள்.

இந்த விண்ணப்பத்தை எதிராளிகள் எதிர்த்தனர். ஏனெனில், காலஞ்சென்ற வழக்காளிக்கு பிள்ளைகள் இருவர் உள்ளனர் என்றும் காலஞ்சென்றவரின் சொத்துக்களை பரிபாலிக்க மரணச் சொத்து அதிகாரப்பத்திரம் ஒன்று வழங்கப்படாமல் அவரது சொத்து சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாது என்றும் ஆகவே, இந்த வழக்கில் சட்டப்பிரதிநிதியாக வரக்கூடியவர் மரணச் சொத்து அதிகாரம் பெற்றவர் மட்டுமே என்றும் வாதாடினர். எனவே, இடைப்புகுநராக வரமுயற்சிக்கும் அவரது மகள் சட்டப் பிரதிநிதியாக வரமுடியாது எனவும் வாதாடினார்.

மாவட்ட நீதிபதி இந்த ஆட்சேபனையை நிராகரித்து பிறிஜெட் இந்த வழக்கின் சட்டப்பிரதிநிதியாக வர சிவில் நடவடிக்கை சட்டத்தின் 404 ஆம் பிரிவின் கீழ் முடியும் எனவும் தீர்த்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து எதிராளிகள் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழக்கை விசாரணை செய்த பின்னர் பின்வருமாறு தீர்த்தது. மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு சரியானது இந்த வழக்கில் சிவில் நடவடிக்கை

முறைச்சட்டத்தின் 404 ஆம் பிரிவை அச்சட்டத்தின் 392 ஆம் பிரிவுடன் சேர்த்தது பிழையாகும்.

392 ஆம் பிரிவின் படி இந்த வழக்கில் வழக்கின் வழக்காளி இறந்ததன் பின்னர் வழக்கெழு காரணம் தொடர்ந்தும் இருக்கிறதா என்று பார்க்கவேண்டிய அவசியமில்லை என்றும் 404 ஆம் பிரிவு சுதந்திரமான ஒரு பிரிவு என்றும் அதனை தனியாக பார்க்கவேண்டுமென்றும் கூறியதுடன் அப்பிரிவின் படி வழக்கை தொடரும் போது இந்த வழக்கெழு காரணத்தை கொண்டு அவ்வழக்கை வழக்காளி இறந்ததன் பின்னர் அவரது சட்டப்பிரதிநிதி கொண்டு நடத்தலாம் என்றும் தீர்த்தது.

## நடைமுறையில் சட்டப் பிரதிநிதியை தெரிவுசெய்யும் போதுள்ள சிக்கல்கள்

வழக்கின் தரப்பார் ஒருவர் இறக்கும் போது அவரது சொத்துக்களின் பொறுமதி 40 இலட்சத்திற்கு குறைவாக இருந்தால் அவரது சொத்தை பரிபாலனம் செய்ய நீதிமன்றத்தில் இருந்து மரணச் சொத்து நிர்வாகப்பத்திரம் தேவையில்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில் இறந்தவரின் உறவினர் அல்லது வழியுரிமைக்காரர் ஒருவரே சட்டப்பரதிநிதியாக விளங்குவர். அவரை நீதிமன்றம் நியமிப்பதில்லை குடும்பத்தவரே அவரை அங்கீகரிப்பர்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் ஒரு வழக்கில் அவரை சட்டப் பிரதிநிதியாக ஏற்கலாமா? என்ற பிரச்சினை எழும்.

சில வழக்குகளில் சட்டத்தரணிகள் இறந்தவரின் மரண சான்றிதழையும் இறந்தவரின் துணைவரின் பெயரையும் பிள்ளைகளின் பெயரையும் குறித்துக்காட்டி அவர்கள் அனைவரையும் இறந்தவரின் பிரதிநிதிகளாக ஏற்கும்படி சத்தியக்கடதாசி மூலம் நீதிமன்றத்தை கேட்பதுண்டு. இவ்வாறு கேட்பதைவிட குறித்த ஒருவரை அதாவது இறந்தவரின்

துணைவரை அல்லது பிள்ளைகளில் ஒருவரை சட்டப்பிரதிநிதியாக ஏற்கும்படி கோரி நீதிமன்றத்திற்கு ஒருவர் விண்ணப்பம் செய்யலாம்.

மற்றவர்கள் இவ் விண்ணப்பத்திற்கு எதிர்ப்பில்லை என்று கூறி கடிதம் ஒன்றை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தால் போதுமானது. நீதிமன்றம் அவரைச் சட்டப் பிரதிநிதயாக ஏற்கும்.

இவ்விடத்தில் இன்னும் ஒரு சிக்கல் நிலவும். இறந்தவர் விவாகம் ஆகாத ஒருவராய் இருந்தால் என்ன செய்யலாம் என்பதே அதுவாகும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் இறந்தவரின் கிட்டிய உறவினர் யார் எனப்பார்க்க வேண்டும். இறந்தவரின் தாய் தந்தையர் இருந்தால் அவர்களில் ஒருவரை பிரதிநிதியாக ஏற்கும். இவர்கள் வயோதிபர்களாக இருந்தால் அவர்களது உடல்நிலை மனநிலை தளரக்கூடிய வாய்ப்பு இருக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்களை சட்டப்பிரதிநிதிகளாக எடுத்தால் வழக்கை கொண்டு நடத்துவது கஷ்ரம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களது அனுமதிக் கடிதத்தைப்பெற்று இறந்தவரின் சகோதரன் அல்லது சகோதரியை சட்டப்பிரதிநிதியாக நியமிக்கும்படி கோரவேண்டும். அவர்களை நீதிமன்றம் அங்கீகரிக்கும்.

இதுவரையும் வழக்காளி ஒருவர் இறந்தால் அவரது சட்டப்பிரதிநிதியாக யாரை நீதிமன்றம் தெரிவு செய்யவேண்டும் எனக் கண்டோம். இனி எதிராளி ஒருவர் இறந்தால் என்ன நடக்கும் எனப்பார்ப்போம்.

## எதிராளியின் சட்டப்பிரதிநிதியாக யாரை நீதிமன்றம் ஏற்கும்?

சிவில் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைக்கு 1990 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் படி பின்வரும் பிரிவு இது சம்பந்தமாகப் புகுத்தப்பட்டுள்ளது. 4(1) இப் பிரிவு பின்வருமாறு கூறுகிறது:

ஒரு வழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட எதிராளிகள் இருந்து அவர்களில் ஒருவர் காலமாகினால் அவர் இல்லாமல் வழக்கைக் கொண்டுநடத்ததேவையான வழக்கெழுகாரணம் முடிவடைந்தால் அல்லது எதிராளி இறக்கும்போது அல்லது எதிராளி ஒருவர் மட்டுமே இருந்து அவர் இறந்தால் வழக்கைக்கொண்டுநடத்த வழக்காளிக்கு உரிமை இருக்கும் பட்சத்தில் பின்வரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்:

1) இறந்தவரின் உறவினர் யார், அவரை சட்டப்பிரதிநிதியாக நியமிக்கலாம் எனக் கூறி வழக்காளி நீதிமன்றத்திற்கு மனுவையும் சத்தியக்கூற்றையும் கொடுக்க வேண்டும். அந்த மனுவில் சட்டப்பிரதிநிதியாக சேர்க்கப்பட வேண்டியவர் வசிக்கும் இடம் அவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு முறை மற்றும் தகவல்களை அந்த மனுவில் கூறவேண்டும்.

2) ஒரு எதிராளி இறந்தால் அவர் இறுதி விருப்பாவணம் ஒன்றை எழுதி வைத்திருந்தால் அல்லது மரணச்சொத்து நிர்வாகத் தத்துவம் ஒன்றை பெறவேண்டியிருந்தால் அதற்கு பல வருட காலம் எடுக்கலாம்.

இதனால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடைபெறுவதற்கு சட்டப்பிரதிநிதியாக நியமிப்பவர்

சம்மந்தமாக சில பிரச்சினைகள் ஏற்படும். இந்த தாமதத்தைத் தவிப்பதற்காக காலஞ்சென்ற வழக்காளி தனது பிரதிநிதியாக யாரை நியமிக்க கருதியிருந்தார் என்பதை அறிந்து அவரது பெயரை நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தி அவரைச் சட்டப்பிரதிநிதியாக நியமிக்குமாறு எதிராளி கோரலாம். காலத்தாமதத்தை தவிர்க்க இது சுலபமான வழியாகும்.

அந்த விண்ணப்பத்தில் இறந்துபோன வழக்காளியின் வழியுரிமையாரின் பெயர்களையும் குறிப்பிட வேண்டும்.

3) இன்னுமொரு வழியும் உண்டு. காலஞ்சென்ற எதிராளி இறுதி விருப்பாவணம் எதனையும் எழுதி வைக்கவில்லை என எடுத்துக் கொள்வோம். அப்போது வழக்காளி இறந்தவரின் சட்டப்பிரதிநிதியாக நியமிக்க வேண்டியவர் இவரே எனக் கேட்டு அவரின் பெயர், விலாசம், உறவு முறை என்பவற்றை ஒரு மனு மூலமும் சத்திய உரை மூலமும் நீதிமனறத்திற்கு அறிவித்து அவரை சட்டப்பிரதிநிதியாக நியமிக்குமாறு கேட்கவேண்டும். நீதிமன்றம் அதனை அனுமதிக்கலாம்.

## வீட்டு வாடகைச் சட்டத்தின் கீழ் எழும் பிரச்சினை ஒன்று

வீட்டு வாடகைக்கு என தனியானதொரு சட்டம் உள்ளது. அதன்படி அச்சட்டத்தின் 36ஆம் பிரிவின் கீழ் வாடகைக் குடியிருப்பாளர் ஒருவர் காலமானால் அவரது துணைவர் அல்லது துணைவி இல்லாத போது பிள்ளைகளில் ஒருவர் வாடகைக் குடியிருப்பாளராக வாடகை சபையால் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒருவர் நியமிக்கப்பட முன்னர் வழக்காளி ஒருவர் காலஞ்சென்ற எதிராளியின் மனைவியை இறந்தவரின் சட்டப்பிரதிநிதியாக ஏற்று வழக்கை நடத்துமாறு கோரினால் நீதிமன்றம் அதனை ஏற்குமா? என்ற வினா ஒரு வழக்கில் எழுந்தது. அந்த வழக்கு ***பிரான்ஸிஸ் எதிர் சிறிசேனவும் மற்றோரும்*** என்பதாகும்.

## இந்த வழக்கின் நிகழ்வுகள்

இந்த வழக்கில் வழக்காளி வாடகைக் குடியிருப்பாளர் தனக்குச் செலுத்தவேண்டிய வாடகைப் பணத்தை செலுத்துவதில்லை என்றும் இதனால் வாடகை நிலுவையில் உள்ளதாகவும் கூறி அவரை வீட்டினின்றும் வெளியேற்றுமாறு வழக்கை தாக்கல் செய்தார். இந்தவழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எதிராளி இறந்தார்.

உடனே வழக்காளி அவரது மனைவியையும் பிள்ளைகளையும் இறந்துபோனவருக்குப் பதிலாக சட்டப்பிரதிநிதியாக நியமிக்கும் படியும் தொடர்ந்து வழக்கை நடத்தும் படியும் கோரிய விண்ணப்பத்தை முதனிலை நீதிமன்றம் ஏற்றது. ஆனால், எதிராளியின் மனைவியும் பிள்ளைகளும் இதனை எதிர்த்ததுடன் வாடகைச் சபை இறந்துபோனவரின் சட்டப்பிரதிநிதியாக யாரை நியமிக்கிறதோ அவரையே நீதிமன்றமும் வழக்கின் சட்டப்பிரதிநிதியாக ஏற்க வேண்டுமென்றும் கூறினர்.

இதனால் முதனிலை நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர்களது கோரிக்கையை ஏற்று முதன்நிலை நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்தது.

இந்த தீர்ப்பில் அதிருப்தி கொண்ட இறந்த எதிரியின் மனைவியும் பிள்ளைகளும் உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றம் பின்வருமாறு கூறியது?

வாடகையாளர் ஒருவர் இறந்தால் யாரை அவரது உரித்தாளராகவும் வாடகையாளராகவும் நியமிக்க வேண்டுமென்று வாடகைச் சட்டம் கூறுவது உண்மையாகும். இது வழக்கொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டுமே பொருந்தும் வழக்கொன்று நடைபெற்றுக்கொண்டு இருக்கும்

போது சட்டப்பிரதிநிதியாக யார் நியமிக்கப்பட வேண்டும் என்று சிவில் நடவடிக்கை முறைச் சட்டமே கூறுகிறது.

அதன்படி வழக்காளியின் விண்ணப்பத்தை ஏற்ற முதனிலை நியாயாதிக்கத்து நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியென தீர்த்தது.

இவ்விடத்தில் ஒரு விடயத்தை வாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். இறந்த ஒருவரின் சட்டப்பிரதிநிதியாக தான் வரவிரும்பவில்லை என்ற ஆட்சேபனையை சட்டப்பிரதிநிதியாக பெயர் குறிக்கப்படும் எவரும் நீதிமன்றத்திற்கு தெரிவித்து அதனை ஏற்கமறுக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், எதிரியின் சார்பில் இவ்வாறு ஒரு சட்டப்பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்படுவதற்கான கட்டளையை நீதிமன்றம் இறந்தவரின் இறப்பு நடந்து ஆறுமாத காலத்தின் பின்னர் தான் வழங்கமுடியும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். மேலும், தான் இறந்தவரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட விரும்பவில்லை எனவும் தெரிவித்து ஆட்சேபனை தெரிவிக்கலாம்.

நீதிமன்றம் அவரது பெயரை சட்டப்பிரதிநியாக வழக்கின் கோவையில் உட்படுத்தினால் எதிரியின் சார்பில் இவர் எதிர்வாதங்களை முன்வைக்க அனுமதிக்கப்படும்.

இவ்விடயத்தில் இன்னுமொரு முக்கிய விடயம் நடைமுறையில் கிளப்பப்படுவது வழக்கம்.

அதாவது மூல எதிராளி ஒருவர் சமர்ப்பித்த ஆட்சேபனைகள் அல்லது எதிர்வாதங்களை மாற்றி புதிதான ஆட்சேபனைகளை அல்லது எதிர்வாதத்தை நீதிமன்றத்தில் சட்டப்பிரதிநிதி வைக்கலாமா? என்ற வினா பல வழக்குகளில் எழுந்துள்ளது. இதற்குரிய தீர்ப்புக்கள் "ஆம்" என்றும் "இல்லை" என்றும் உள்ளன.

ஆயினும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்ப்பு இல்லை என்பதே. ஏனெனில் சட்டப்பிரதிநிதி வழக்கைக் கொண்டுநடத்த நீதிமன்றத்திற்கு உதவுவதற்கான நியமிக்கப்படுகிறாரே தவிர மூலஎதிராளியின் எண்ணத்தை மாற்றி தனது எண்ணத்தை புகுத்துவதற்காக அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிவிடல் வழக்குகளில் வழக்காளி அல்லது எதிராளிகள் சமர்ப்பித்த உரித்து உரிமைக் கோரிக்கையை மறுதலித்து சட்டப்பிரதிநிதி புதியதொரு உரித்துக்கோரிக்கையை முன்வைக்க அனுமதிக்கப்பட்டால் அங்கு வழக்கைக்கொண்டு நடத்துவது கஷ்டமாக இருக்கும் என்பதை காணலாம். ஆகவே சட்டப் பிரதிநிதி மூலத்தை மாற்ற அனுமதிக்கப்படக் கூடாது என்பதே சிறந்த கொள்கையாகும்.

### தொகுப்புரை

I. வழக்கொன்றில் வழக்காளிகள் பலர் இருந்து அதில் ஒருவர் இறந்தால் ஏனையவர்கள் வழக்கை கொண்டுநடத்தலாம் என்று நீதிமன்றம் கருதினால் இறந்தவரின் சார்பில் ஒருவரை நியமிக்காமல் உள்ள வழக்காளிகளை கொண்டே வழக்கை நடத்தலாம்.

II. வழக்கொன்றில் ஒரு வழக்காளியே இருந்து, அவர் இறந்தால் அவருக்கு பதிலாக தான் வழக்கைக் கொண்டுநடத்த வேண்டுமென அவரது சட்டப்பிரதிநிதி கோரி வழக்கை நடத்தலாம்.

III. சிவில் நடவடிக்கை சட்டத்தின் 404 ஆம் பிரிவு தனிமையானது. அதனை மேற்படி சட்டத்தின் 392 ஆம் பிரிவுடன் சேர்ந்து குழப்பக்கூடாது.

IV. எதிராளி ஒருவர் இறந்துபோதும் மிகுதியாயுள்ள எதிராளிகளுக்கெதிராக வழக்கை நடத்தி நிவாரணம் பெறலாம்

என வழக்காளர் கருதினால் சட்டப்பிரதிநிதி இல்லாமலேயே வழக்கை நடத்தலாம்.

V வாடகைச் சபையின் தீர்மானத்தின் படியே சட்டப்பிரதிநிதி நியமிக்கப்பட வேண்டும் என்பது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் செல்லாது.

V1 சட்டப்பிரதிநிதிகள் தாம் சட்டப் பிரதிநிதியாக வரவிருப்பமில்லை என தெரிவிக்கலாம். மூலவழக்காளியின், எதிராளியின் எண்ணத்தில் மாறாகப் போகக்கூடாது.

03

## உண்மையான சொந்தக்காரனை விட சட்டவிரோதிக்கு போஷாக்கு ஊட்டவே ஆரம்ப நீதிமன்றச்சட்டம் உதவுகிறது

1979 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றத்தின் 7 ஆம் அதிகாரத்தில் உள்ள 66 ஆம் பிரிவில் தொடங்கி 75 ஆம் பிரிவு முடியும் வரையுள்ள பிரிவுகள் காணி சம்பந்தமாக எழும் பிரச்சினைகளால் பொது அமைதிக்கு பங்கம் விளைகிறது எனக் கண்டால் அதனை ஆரம்ப நீதிமன்றம் தடுக்க எவ்வித நடவடிக்கை முறையைக் கையாள வேண்டும் என்பது பற்றி கூறுகிறது.

இப்பிரிவுகள் இந்திய குற்றவியல் சட்டத்தின் 10 ஆவது அத்தியாயத்தில் பொது ஒழுங்கு மற்றும் அமைதிகாப்பது என்ற தலையங்கத்தின் கீழ் உள்ள ஈ பிரிவில் கூறப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் பற்றிய பிரச்சினைகள் என்ற பகுதிக்குள் அடங்கியுள்ள பிரிவுகளை இலங்கை ஆரம்ப நீதிமன்றமும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளன என்று கூறலாம்.

### இந்தியாவில் காணி என்பது எதை குறிக்கிறது?

இந்தியாவில் அசையாத சொத்துக்கள் என்ற பகுதிக்குள் பின்வருவன அடங்குவதாக உள்நாட்டுச் சட்டம் கூறியுள்ளது. இந்தப் பிரிவுக்காக நிலம் என்ற சொல் கட்டிடங்களையும் சந்தைக் கட்டிடங்களையும் பயிர் அல்லது வேறு விளைச்சல்களையும் மீன்பிடித்துறைகளையும் அவற்றின் மூலம் பெறக்கூடிய வருவாய்களையும் இலாபங்களையும் குறிக்கும் (ஆதாரம் 145 (2)ஆம் பிரிவு)என்றாகும்.

**இலங்கையில் காணி என்பது எதைக் குறிக்கிறது?**

இலங்கையில் ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 75 ஆம் பிரிவின்படி காணியுடன் தொடர்புடைய தகராறுகள் என்ற பிரிவுக்குள்ளேயே இந்நடவடிக்கை முறை செல்லுபடியாகிறது. தீர்க்கப்பட்ட வழக்கொன்றில் காணி என்பதில் கட்டிடம் அடங்குகிறது என்றும் கட்டிடத்தில் உள்ள அறை (room) அடங்கவில்லை என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. காணி என்பதில் கட்டிடம் காணியின் எல்லைகள் காணியின் பகுதியில் பயிர்செய்கை பண்ணுதல் அப்பயிர்செய்கையை அனுபவித்தல் சேவக உரிமை என்பனவும் அடங்குவதாக கூறப்பட்டுள்ளது.

1973 ஆம் ஆண்டு நீதி நிர்வாகச் சட்டத்தின் 62, 63, 65 ஆம் பிரிவுகளில் கூறப்பட்ட அதே விடயங்கள் அதாவது காணியென்றால் என்ன என்பதற்கான பொருள் இந்த ஆரம்ப நீதிமன்றச்சட்ட திட்டம் அதே பொருளில் வழங்குகிறது. ஆயினும் நீதி நிர்வாக சட்டத்தின் கீழ் இத்தகராறுகள் ஆரம்ப நீதிவான் நீதிமன்றமே விசாரித்தது.

ஆனால் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் இலக்க நீதிமன்ற சட்டத்தின் கீழ் இந்த அதிகாரம் நீதிவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.

**ஆரம்ப நீதிமன்றம் எதனை கவனிக்கிறது?**

ஆரம்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் காணியுடன் தொடர்புடையது எனக் கண்டோம். ஆனால் அந்த வழக்கில் காணியின் உண்மையான உரித்தாளர் யார்? என ஆரம்ப நீதிமன்றம் பார்ப்பதில்லை. அதனைப் பார்ப்பது மாவட்ட நீதிமன்றமேயாகும். ஆயினும் காணியுடன் தொடர்புடைய தகராறு ஒன்று ஏற்பட்டு அந்த தகராறின் காரணமாக பொது அமைதிக்கு பங்கம் விளையப் போகின்றது என நீதிவான் தீர்மானித்தால் அதனைத் தடுப்பதற்காக சில

கட்டளைகளை தகராறு செய்பவர்களுக்கு பிறப்பிக்கலாம். இந்த கட்டளை நிரந்தரமானதல்ல. தற்காலியமானதேயாகும். ஆகவே மாவட்ட நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் காணியின் உரிமையைப்பற்றிய ஒரு தீர்ப்பை வழங்கும் வரையில் மட்டுமே நீதிவானின் தீர்ப்பு வலுவுள்ளதாகவிருக்கும். ஆகவே இதனை ஒரு இடைக்கால தடை உத்தரவு என்று கூறலாம்.

ஆயினும் இக்கட்டளையானது உண்மையான உரித்தாளருக்கு கிடைக்காமல் போலிக்காரன் அதாவது உடமையில் இருந்தேன் என்று கூறுபவனுக்கு கிடைத்தால் அதனால் உண்மையான உரித்தாளன் மனச்சோர்வு அடைவதுடன் பலமற்றவனாகவும் மாறுகின்றான் எனலாம். அது எப்படி எனப் பார்ப்போம்.

**உண்மையான உரித்தாளனின் நிலை**

போலி உடமையாளனுக்கு உடமை கிடைத்ததன் பின்னர் உண்மையான உரிமையாளன் அக்காணிக்குள் செல்ல முடியாது. செல்லலாம் என்று கூறினாலும் யாரும் செல்வதில்லை. அவ்வாறு சென்றால் தகராறு மேலும் அதிகரிக்குமே தவிர குறைய வழியில்லை.

போலி உடமைக்காரன் அக்காணிக்குள் தனக்கு தேவையானவாறு அபிவிருத்தியை செய்யலாம். சட்டம் காணியின் தன்மையை மாற்றக்கூடாது என்று கூறினாலும் போலி உடமையாளன் செய்வதை தடுக்க உரித்தாளனால் முடியாது. பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டால் பொலிஸார் கூறுவது என்னவென்றால் நீதிமன்றத் தீர்ப்புப்படி அவருக்குத்தான் காணி. ஆகவே அதனை தடுக்க முடியாது என்றாகும். ஆகவே உண்மையான உரித்தாளன் பாதிக்கப்படுவான். வாடகை செலுத்தி வந்தவன் வாடகையையும் செலுத்துவதை நிறுத்துவதுண்டு.

மாவட்ட நீதிமன்றத்திற்கு சென்று போலி உடமைக்காரனுக்கு விரோதமாக தடையுத்தரவு கேட்க முடியாதா? என்ற பிரச்சினை எழுகிறது.

தடையுத்தரவு கேட்டாலும் நீதிமன்றங்கள் ஆரம்ப நீதிமன்றத்தீர்ப்புக்கு எதிராக தடையுத்தரவு வழங்குவதில்லை. மேன்முறையீட்டிலேயே தடையுத்தரவு கேட்க வேண்டும்.

மாவட்ட நீதிமன்றத்திற்கு ஆரம்ப நீதிமன்றத் தீர்ப்பை மீளாய்வு செய்யும் அதிகாரமில்லை. மாவட்ட நீதிமன்றம் முன்னிலை நியாயாதிக்கத்தை மட்டும் கொண்டுள்ளது. ஆகவே ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்ப்பை மீளாய்வு செய்து தடையுத்தரவு வழங்க முடியாது. சட்ட அறிவில்லாதவர்களும் வேறு சிலரும் கூறுவதை கேட்டு உண்மையான சொந்தக்காரன் மாவட்ட நீதிமன்றம் சென்று தடையுத்தரவு கேட்டு மீண்டும் தோல்வியைச் சந்திக்க வேண்டியேற்படும். அவ்வாறானதொரு நிலையேற்பட்டால் காணி சொந்தக்காரன் மேலும் பாதிக்கப்படுவான்.

**அபிவிருத்திப் பணத்தைக் கேட்கலாம்.**

இன்னுமொரு வழியிலும் உண்மையான சொந்தக்காரன் பாதிக்கப்படுகிறான். போலியானவன் காணியை அபிவிருத்தி செய்ததற்குரிய இழப்பீட்டை கேட்டு வழக்குத்தாக்கல் செய்யலாம். அந்த இழப்பீடு செலுத்தப்படும் வரை தான் அக்காணியில் இருப்பதற்கு உரித்துள்ளவன் என்று நம்பலாம். அவன் அக் காணியில் உடமையில் இருக்கும் போது "UT Dominis" ஆக அதாவது தானே சொந்தக்காரன் என்ற எண்ணத்துடன் இருந்ததாகக் கூறி வாதாடலாம். வாதாட்டத்தில் வெற்றிபெறலாம் அல்லது தோல்வி அடையலாம். ஆயினும் அதன் மூலம் உண்மையான உரித்தாளனுக்கு தொல்லை கொடுக்கலாம். ஆகவே இவற்றைப் பார்க்கும் போது ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கையின் பயன் உண்மையான

உரித்தாளனுக்கு பாதகமாகவும் போலியான உரித்தாளனுக்கு நன்மையானதாகவும் இருக்கிறது எனலாம்.

**இராமலிங்கம் எதிர் தங்கராஜா வழக்கு**

இதற்கு நல்லதொரு உதாரண வழக்கு ஒன்று உண்டு மேற்படி வழக்கில் உடமையைப் பெற்ற போலிச் சொந்தக்காரன் தான் உடமை பெற்ற காணியில் ஒரு கட்டிடத்தைக் கட்டினான். அவர் கட்டிய கட்டிடத்தால் மாணிக்கக்கல் அகழும் இடத்திற்கு செல்லுகின்ற வழி மறிக்கப்பட்டு இருந்தது. இதனைச் சுட்டிக்காட்டி உண்மையான உரித்தாளன் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட நிபந்தனைக்கு மாறாக இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்று கூறி வழக்கைத்தாக்கல் செய்தார். நீதிமன்றம் கூறியது என்னவெனில், கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்க முடியாது என்றாகும். இது பின்னர் மாற்றப்பட்டது. ஆயினும் அந்த மாற்றத்தை பெற எத்தனையோ படிகளை தாண்டிச் செல்ல வேண்டும். ஆகவே சுருக்கமாக கூறுவதானால் ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கை முறையால் உண்மையான உரித்தாளன் பாதிக்கப்படுகிறான் எனலாம். இதனை தவிர்க்க வழியில்லையா? என்ற வினாவைக் கேட்கலாம். இதை தவிர்ப்பதற்கு உள்ள ஒரே ஒரு வழி ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 68 ஆம் பிரிவை நன்றாக விளங்கிக் கொள்வதேயாகும். இதனை ராமலிங்கம் எதிர் தங்கராஜா என்ற வழக்கில் நீதிமன்றம் அளித்த .தீர்ப்பை நன்கு படித்தால் புரிந்து கொள்ளலாம். அத்தீர்ப்பின் முக்கியமான பகுதி பின்வருமாறு உள்ளது.

"This the duty of the judge in proceeding under sec 68 is to ascertain which party was or deemed to have been in possession on te relevant date, Namely on the date of te filing of the information under sec.66. Under section 68 the judge is bound to maintain the possession of suc person even if he e a rank

trespasser as against any interference even by the rightful owner this section entitles even a squatter to the protection of the law. Unless His possession was acquired within two months filing of the information."

இதன் சாராம்சம் என்னவெனில் பொலிஸார் ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் தகவல் அறிக்கையை சமர்ப்பித்த தினத்திற்கு முந்திய இரண்டு மாதங்களுக்கு முன்னர் அக்காணியின் உடமையில் இருந்தவர் யார்? அவரை அந்த உடமையில் இருந்து அகற்றியவர் யார் என்பதை பார்த்து உடமையில் இருந்தவரிடமே அக்காணியின் உடமையை கொடுக்க வேண்டுமே தவிர உடமையை அகற்றிய உரித்தாளரிடம் அல்ல என்பதாகும். அத்துமீறியோ அல்லது அடாத்தாகவோ காணியைப் பிடித்தவராக அவர் இருக்கலாம். அவரிடமே உடமை ஒப்புவிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

**காணித்தகராறு வந்தால் என்ன செய்ய வேண்டும்?**

ஆகவே காணி தகராறு சம்மந்தமாக பொலிஸாருக்கு யாராவது ஒருவர் முறைப்பாடு செய்து அந்த முறைப்பாட்டை பொலிஸார் விளங்குகின்றார்கள். அப்பொழுது முறைப்பாட்டிற்கு முன்னர் இரண்டு மாத காலத்தில் உரித்தாளரல்லாத ஒருவரே அங்கு இருந்தார் என்று கண்டால் அவரை வெளியேற்ற ஆரம்ப நீதிமன்றச்சட்டத்தின் கீழ் வழக்கை தாக்கல் செய்யப்படக்கூடாது. உடனடியாக அவரை அங்கேயே இருக்கவிட்டுவிட்டு மாவட்ட நீதிமன்றத்தில் உரித்து நிறுவல் வழக்கைதாக்கல் செய்ய வேண்டும் என்று அவருக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். இது சட்டத்தரணிகளின் கடமையாகும். இந்த நிலையை ஒரு சிறு உதாரணத்தின் மூலம் பின்வருமாறு விளக்கலாம்.

உதாரணம்:- ஒருவர் ஒரு வாடகை ஒப்பந்தத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு 2013 -01-30 ஆந் திகதி ஒரு வருடகாலத்திற்கு எடுக்கிறார். 31-12-2013 இல் அவர் வாடகை வீட்டை தர மறுத்து வீட்டுச் சொந்தக்காரரின் உரித்தை மறுக்கிறார். இதனால் அவர்களுக்கிடையே சச்சரவு உண்டாயிற்று தற்போது வீட்டுச் சொந்தக்காரன் அவரை வீட்டில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகிறார். அதேசமயம் வாடகைக்காரனும் சட்ட ஆலோசனை பெற்றுக் கொண்டு இருக்கிறார். எவ்வாறு வீட்டுச் சொந்தக்காரன் நடவடிக்கை எடுக்கலாம் என்பதே வினாவாகும்.

வீட்டுச் சொந்தக்காரனுக்கு ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் வழக்கைத் தாக்கல் செய்ய ஆலோசனை வழங்கப்பட்டால் அவர் அந்த வழக்கில் உடமையை இழப்பார். எப்படியெனில் வாடகைக்காரன் 31-12-2013க்கு முன்னர் இரண்டு மாத காலம் மேற்படி வாடகை வீட்டில் குடியிருந்தான் என்பதை இலகுவில் நிரூபிக்க அவனிடம் வாடகை ஒப்பந்தம் இருந்தது. ஆகவே வீட்டுச் சொந்தக்காரன் உடமையை பெற முடியாது. வாடகைக்காரனுக்கே நீதிமன்றம் உடமையை அளிக்கும். எனவே வீட்டுச் சொந்தக்காரன் 66ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தால் பலன் கிடைக்கும். ஏனெனில் முரண் தடை (estoppel)என்ற சட்டக் கொள்கையானது காணிச் சொந்தக்காரனுக்கு சார்பாக இருக்கும். எப்படியெனில் முன்னர் செய்த செயல் ஒன்றால் நன்மை அடைந்த ஒருவர் பின்னர் அச்செயலுக்கு முரணாக நடப்பதை சட்டம் அனுமதிப்பதில்லை. இதனை

"It would be un just to allow someone to do or say something, yet afterwards try to obtain an advantage by denying the validity of what he did earlier" என்ற Pubilc Policy யின் கீழ் நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை.

வாடகைக்காரன் வீட்டுச்சொந்தக்காரனின் உரிமையை owner ship வீட்டுச் சொந்தக்காரன் என அங்கீகரித்து பின்னர் அதனை மறுத்து வீட்டை கையளிக்க முடியாது என்று கூறுவதை நீதிமன்றம் அனுமதிக்காது. ஆகவே அவனை வீட்டில் இருந்து வெளியேற்ற 66 ஆம் பிரிவின் கீழ் வழக்கை தாக்கல் செய்வதை விட மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்து வெளியேற்றுவதே பலன்தரும் என சட்ட ஆலோசனை வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் இலகுவான வேலை 66 ஆம் பிரிவு வழக்கு எனக் கூறி ஆலோசனை வழங்கினால் இறுதியில் வீட்டுச் சொந்தக்காரன் வீட்டையும் இழந்து வாடகையையும் இழப்பான்.

## 66 ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் வழக்கில் இடைக்காலத் தடை பெறலாமா?

ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 67(3) ஆம் பிரிவின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது என்னவெனில், ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விளக்கத்தில் இருக்கும் போது அந்த வழக்குச் சம்பந்தமாக மேற்படி சட்டத்தின் 68, 69 ஆம் பிரிவுகளின் கீழ் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை நீதிமன்றம் வழங்கலாம். இத்தடையுத்தரவு ஆரம்ப நீதிமன்றத்தின் இறுதிக் கட்டளை வழங்கும் வரை செல்லுபடியாகும். இந்த தடையுத்தரவு பொரும்பாலும் வழங்கப்பட வேண்டும் என்பது ஒரு பகுதியாரை மறுபகுதியார் பலாத்காரமாக வெளியேற்றிய சந்தர்ப்பத்தில் மட்டுமே என்பது கவனிக்கத்தக்கது.

இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில், இந்தக் கட்டளையை சத்தியகடதாசி கொடுத்த பின்னரும் மாற்று சத்தியக் கடதாசி கொடுத்த பின்னருமே வழங்க முடியும் என்றும் சாதாரணமாக தகவல் அறிக்கை 66 (1) இன் கீழ்

அல்லது 66 (1)ஆ வின் கீழ் கிடைத்ததும் வழங்கப்படக் கூடாது என்பதாகும்.

ஆனால் சந்தர்ப்பத்தைப் பொறுத்து தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சத்திய உரைகள் புறம்பாக வேறு சுயேட்சையான சாட்சிகள் அல்லது ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் அதன்கீழ் நீதிமன்றம் திருப்திப்பட்டால் இடைக்காலத் தடையை வழங்கலாம். எப்படியிருப்பினும் இந்த இடைக்காலத்தடை எந்த விதத்திலும் இறுதித் தீர்வையை பாதிக்காது.

## நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

ஆரம்ப நீதிமன்ற வழக்கு தகவல் அறிக்கை சமர்பிக்கப்பட்ட தினத்திற்கு முந்திய இரு மாத காலத்திற்குள் உடமையில் இருந்தவர் உடமை அகற்றப்பட்டுள்ளாரா? என்பதை பார்த்து அவரை உடமையில் இருத்துதலை நோக்கமாக கொண்டதேயாகும். ஆகவே சத்தியக்கடதாசியுடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் அந்த இரண்டு மாத காலத்திற்குள் உடமை அகற்றப்பட்டதை எடுத்துக் காட்டும் ஆவணங்களாக இருக்க வேண்டும். அதைவிடுத்து வாக்காளர் இடாப்பு, மின்சாரப்பட்டியல்,தொலைபேசி பட்டியல், தண்ணீர் ரசீது பாடசாலையில் அதிபரால் வழங்கப்படும் அறிக்கைகள் ஆகியவற்றை பலர் சத்தியக் கடதாசியுடன் இணைத்து முன்வைப்பது வழக்கம். இவற்றால் எந்தப் பலனும் இல்லை. இவை வழக்கின் கோவையை நிரப்பவே உதவி செய்யும். தீர்ப்புக்கு உதவி செய்யாது.

உண்மையில் ஒருவர் உடமை அகற்றப்பட்டதை அவரது அயல் வீட்டுக்காரர் எடுத்துக் கூறலாம். அதேபோல் கிராமசேவையாளர் எடுத்துக் கூறலாம். அத்தகையவரின் சத்திய உரை கிடைக்குமானால் அது மிகுந்த பலன் அளிக்கும். ஆனால் அவற்றை பெறாமல் தேவையற்ற

ஆவணங்களை முன் வைத்து விட்டு பின்னர் நீதிமன்றத்தீர்ப்பு பிழையானதென விமர்சிப்பதில் பயனில்லை.

**ஆவணப்பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத ஆவணங்களும் செல்லும்.**

**புண்ணியதாச எதிர் ஹமில்டன் வழக்கு.**

சாதாரணமாக ஒருவர் கருதுவது என்னவெனில், வாடகைக்கு எடுக்கப்படும் வீடுகள் சம்பந்தமாக வீட்டின் சொந்தக்காரனுக்கும் வாடகையாளருக்குமிடையே செய்யப்படும் வாடகை ஒப்பந்தமானது ஆவணப்பதிவுச் சட்டத்தின் கீழ் காணிக்கந்தோரில் பதிவு செய்யப்பட்டால் மட்டுமே செல்லும் என்பதாகும். ஆனால் இது தவறு. பதிவு செய்யப்படாத ஆவணத்தின் மூலமும் வாடகைக்காரர் அங்கு குடியிருந்தார் என்பதை நிரூபிக்க முடியும். புண்ணியதாச எதிர் ஹமில்டன் வீரசிங்க என்ற வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியது என்னவெனில், அந்த ஆவணமானது ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 72 (ஆ) இன் கீழ் ஆரம்ப நீதிமன்றத்தால் ஏற்கப்பட வேண்டும் என்றாகும்.

**வேலுப்பிள்ளை எதிர் சிவநாதன் வழக்கு**

ஆரம்ப நீதிவானுக்கு தகவல் அறிக்கையை தகராறு நிலவுகின்ற இடத்தின் நியாயாதிக்கமுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி 66(1) இன் கீழ் சமர்ப்பிக்கலாம். அதேபோல் 66(1)ஆ வின் கீழ் சாதாரண ஒருவரும் சமர்ப்பிக்கலாம். ஆனால் 66(1)ஆ இன் கீழ் தகவல் அறிக்கையை சமர்ப்பிக்கும் போது குறைந்தபட்சம் ஒரு காணித் தகராறு நிலவுகிறது என்பதை எடுத்துக்காட்ட தரப்பார் பொலிஸ் நிலையத்திற்கு கொடுத்த முறைப்பாட்டின் பிரதியையாவது சத்திய உரையுடன் இணைக்க வேண்டும். இல்லையேல் நீதிமன்றம் அங்கு ஒரு தகராறு நிலவுவதாக கருதி தனது நியாயாதிக்கத்தை பாவிக்க

முடியாது. ஆயின் பின்னர் நடைபெறுகின்ற விளக்கத்தின்போது சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில் இருந்து உண்மையில் தகராறு ஒன்று நிலவுகிறது என கண்டால் நீதிமன்றம் நியாயாதிக்கத்தை பாவிக்கலாம் என்று வேலுப்பிள்ளை எதிர் சிவநாதன் வழக்கில் தீர்க்கப்பட்டது.

**ஆரம்ப நீதிமன்ற கட்டளைக்கு எதிராக மீளாய்வு.**

ஆரம்ப நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு இல்லை என மேற்படி சட்டத்தின் 74 (2) ஆம் பிரிவு கூறுகிறது. ஆயினும் மாகாண மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு செய்ய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 154 ஆம் பிரிவு இடமளிக்கிறது.

கண்டி ஆரம்ப நீதிமன்றம் இலக்கம் 76908 இன் தீர்ப்பை மீளாய்வு செய்வதற்காக செய்யப்பட்ட மீளாய்வு மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியது என்னவெனில், ஆரம்ப நீதிமன்றத் தீர்ப்பு ஒரு இடைக்கால தீர்ப்பு அத்துடன் மூன்று மாதங்களுக்கிடையில் தீர்க்கப்பட வேண்டியுமிருப்பதால் அந்த தீர்ப்புக்கு எதிராக மீளாய்வு செய்வதில் பலன் இல்லை என்றும் சரியான வழி மாவட்ட நீதிமன்றத்தில் உரித்து வழக்கை தாக்கல் செய்வதே என்றுமாகும். இத்தீர்ப்பின் மூலம் உரித்துள்ளவனுக்கே பாதுகாப்பு உண்டு என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறினாலும் ஆரம்ப நீதிமன்ற தீர்ப்பு, அதன் பின்னர் மேன்முறையீட்டுத் தீர்ப்பு அதன் பின்னர் உயர் நீதிமன்றத் தீர்ப்பு என்றெல்லாம் தீர்ப்புக்கள் இருப்பதால் நீண்ட காலத்திற்கு உரித்தாளன் காணியை இழந்திருக்க வேண்டும் என்பதும் உண்மையே. ஆரம்ப நீதிமன்றக்கட்டளைக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு (injunction)எடுக்க முடியாது. ஆனால் ஆரம்ப நீதிமன்றத் தீர்ப்பை நிறுத்தி வைக்கும் கட்டளையை stay order பெறலாம்.

### ஆரம்ப நீதிமன்ற கட்டளையை நிறுத்துவது பற்றி

இந்த stay order நிறுத்தி வைக்கும் கட்டளையை மாகாண மேல் நீதிமன்றத்திலேயே பெற வேண்டும். அரசியல் அமைப்பின் 154(3)(ஆ) பிரிவின் கீழ் மேல் மாகாண நீதிமன்றங்களுக்கு இவ்வதிகாரம் உண்டு. இது இடைக்காலத் தடையல்ல (injunction) அல்ல. தீர்ப்பை அமுலுக்கு கொண்டு வருவதை தற்காலிகமாக ஒத்திவைத்தலேயாகும்.

இந்த நிறுத்தி வைக்கும் கட்டளை மேல் நீதிமன்ற விசாரணை முடியும் வரை அல்லது மீளாய்வு விண்ணப்பத்தை மேல் நீதிமன்றம் ஏற்று பிராதிவாதிக்கு ஆட்சேபனையை அளிக்க வழங்கப்பட்டுள்ள காலத்திற்கு வழங்கலாம்.

### தீய நோக்கோடு செய்யப்படும் முறையீடுகளுக்கெதிராக நட்டஈடு பெறலாமா?

தீய நோக்கோடு செய்யப்படும் முறையீடுகளுக்கெதிரான இன்ஜிரியா வழக்குகள் தொடுக்கப்படலாம் என கே.எஸ்.அல்விஸ் எதிர் எட்வர்ட் அகங்கம வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்த்தது.

மேற்படி வழக்கில் எதிராளி தீய நோக்கோடு வழக்காளிக்கெதிராக பொலிஸில் புகார் செய்ததுடன் அது சம்பந்தமான விளக்கம் நீதிவான் நீதிமன்றத்தில் நடந்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மாவட்ட நீதிபதி இழப்பீடு பெற முடியர்து என தீர்த்தார். ஆனால் மேன்முறையீட்டில் உயர் நீதிமன்றம் பின்வருமாறு தீர்த்தது. ஒரு முறையீடு தீய நோக்கோடு செய்யப்பட்டிருந்தது. அதன்பலனாக ஒருவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்டிருந்தவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றது.

இதன்படி ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்வதற்கு அல்லது வழக்கை தொடங்குவதற்கு பொய்யான தகவல்களை வழங்கியிருந்தால் அதன்பலனால் உண்மையான உரித்தாளர் பாதிக்கப்பட்டிருந்தால் பொய்வழக்கைத் தாக்கல் செய்தவருக்கு எதிராக இன்ஜிரியா வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நட்ட ஈடு வழங்க இடம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஆரம்ப நீதிமன்றத்தின் உண்மையான எதிர்பார்ப்பும் கிடைக்கும் எனலாம்.

04

## காதல் திருமணம் தடைப்பட்டால் நிவாரணம் பெற முடியுமா ?

நான் மிகச் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன் அந் நிகழ்ச்சியில் பல அம்சங்கள் என்னைக் கவர்ந்தது. விசேடமாக குடும்பத்தைப் பற்றி பேச்சாளர்கள் கூறிய கருத்துக்கள் என்றுமே மறக்கமுடியாதவையாக இருக்கின்றன. அவற்றில் ஒரு கருத்தை மட்டுமே இங்கு கூற விம்புகிறேன்.

இவ்வுலகைப்படைத்த இறைவன் முழு உலகையும் தன்னால் கட்டியாளலாமா? என்ற சந்தேகத்தை கொண்ட போது அதற்கு மாற்றீடாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனது பிரதிநிதியாக ஒரு பெண்ணை நியமித்து அவளுக்கு தனது ஆசியை வழங்கி உலகத்தை நல்ல வழியில் நடத்த முடியும் என நினைத்ததன் பயனாகவே எமது குடும்பத்தில் இறைவனின் பிரதிநிதியாக தாய், மனைவி விளங்குகின்றார்கள் என்று கூறியது சாதாரணமான கூற்றாக இருந்தாலும் மிக ஆழமான கருத்தாக இருக்கின்றது. ஆகவே ஒரு குடும்பத்தின் தலைவியாக வருபவள் ஒவ்வொருவரும் இறைவனின் பிரதிநிதியாக இருப்பதால் அவள் தூய்மை மிக்கவளாகவும் மற்றவருக்கு வழிகாட்டியாகவும் இருப்பதால்தான் விவாகம் செய்யும் முன்னர் எப்படிப்பட்ட துணைவர் தனக்கு கிடைக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறு ஒன்றுமேயில்லை.

அப்படிப்பட்ட பெண்கள் பலர் வயதின் காரணமாக சில ஏமாற்றுதலுக்கும் ஆளாகி விடுவதை நாம் அன்றாடம் காண்கின்றோம். சிலர் தற்கொலை செய்து கொள்வதும் இன்னும் சிலர் இறுதிவரையும் விவாகம் செய்யாமல் வாழுவதையும் நாம் காண்கின்றோம். இதனால் சட்டத்தின் முன் இத்தகையவர்களுக்கு எந்த அனுதாபமோ நிவாரணமோ இல்லை என்பதற்கு நல்ல உதாரணமாக விளங்குவது தாலி கட்டுவதற்கு முன்னர் ஒரு இளைஞனும் யுவதியும் செய்து

கொள்ளும் விவாகம் சம்மந்தமான ஒப்பந்தமாகும். இலங்கையில் விவாக ஒப்பந்தம் என்பது பெறுமதியற்ற ஒன்று என்பதை இவ் இளைஞர்களும் யுவதிகளும் புரியாததாலேயே இவர்களது வாழ்க்கை பாலைவனமாகிறது. ஆகவே நாம் இன்று பார்க்கப் போவது இலங்கையில் விவாக ஒப்பந்தம் ஒன்று அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அதற்குத் தேவையான சட்ட நிபந்தனைகள் அல்லது உப அவயவங்கள் எவை எனப் பார்ப்பதாகும். இது பலருக்கு பயனுள்ளதாக அமையும். நிபந்தனைகள் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டும் நிவாரணம் கிடைக்கும் இல்லையேல் தோல்வியே கிடைக்கும் இனி இதனை விரிவாக பார்ப்போம்.

**இலங்கையில் உள்ள சாதாரண விவாகச் சட்டங்கள்**

இலங்கை மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விவாகம் சம்பந்தமான சட்டங்கள் சில உண்டு. பாரம்பரிய முறைகளின் கீழ் ஒரு ஆணும் பெண்ணும் விவாகத்திற்கு உட்படும் முறை பற்றியும் 1907 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க விவாகப் பதிவுச் சட்டமும் முக்கியமானவை. 1952 ஆம் ஆண்டு கண்டி சிங்கள மக்களுக்கு உரித்தான கண்டிய விவாகச் சட்டமும் 1951 ஆம் ஆண்டு முஸ்லிம் விவாகம் விவாகரத்து சட்டமும் அவற்றில் அடங்கும்.

ஆரம்பத்தில் கரைநாட்டுச் சிங்கள மக்களுக்கும், தமிழர்களுக்கும் விசேடமான விவாகச் சட்டங்கள் இல்லாமல் இருந்ததால் அவர்களுக்கும் பறங்கியர், ஐரோப்பியர்கள், இந்தியர்கள் ஆகிய வெளிநாட்டவர்களுக்கும் உரோம டச்சுச் சட்டமே உதவி புரிந்தது.

ஆயினும் ஆங்கிலேயரது காலத்து 1847 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினாலும், 1863 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினாலும், 1877 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினாலும், 1895 ஆம்

ஆண்டு 2 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினாலும் உரோம டச்சுச்சட்டம் கொள்கைகள் மாற்றமடைந்து வேறு உபாயங்களுடன் உரோம டச்சுச்சட்டம் புதிய பொலிவுடன் 1907 ஆம் ஆண்டு பொது விவாக கட்டளைச் சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டது. ஆகவே இன்று இலங்கையில் அநேகமானவர்கள் 1907 ஆம் ஆண்டு பொது விவாகக் கட்டளைச் சட்டத்தின் கீழேயே தமது விவாகத்தை நடத்துகின்றனர் எனலாம்.

ஆயினும் இருபகுதியாரும் மணவாளனும் மணவாட்டியும் இஸ்லாமிய சமயத்தவர்களாக இருப்பின் பொது விவாகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விவாகம் செய்யமுடியாது என பொதுக் கட்டளைச் சட்டத்தின் பாயிரம் (Preamble) கூறுகிறது.

இதற்கு காரணம் இஸ்லாமிய சட்டம் பலதார மணத்தை (Polygamy) அங்கீகரிப்பதும் ஏனையவர்கள் ஒருதார மணத்தை (Monogamy) அங்கீகரிப்பதுமே காரணமாகும். ஆயினும் இலங்கையில் பலதார மணத்தை இஸ்லாமிய மதம் அங்கீகரித்து இருந்தாலும் இங்கு வாழும் இஸ்லாமியர்களில் பெரும்பான்மையினர் ஒருதார மணத்துடனேயே வாழுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் வாசகர்களுக்கு ஒரு விடயத்தை கூற வேண்டும். சட்டமா அதிபர் எதிர் ரிட் என்ற வழக்கில் பிறப்பால் இஸ்லாமியராக இல்லாமல் இடையில் இஸ்லாம் தர்மத்தை தழுவும் ஒருவர் விவாகம் செய்திருந்தால் அந்த விவாகத்தை ரத்துச் செய்யாமல் மீண்டும் விவாகம் செய்யலாமா? என்ற வினா எழுந்த போது பிரபுக்கள் சபை முடியும் என்று கூறியது. இதனைச் சாட்டாக வைத்து பலதார மணம் செய்ய விரும்புபவர்கள் போலியாக தாம் இஸ்லாமிய தர்மத்தை சார்ந்து விட்டதாக கூறி விவாகம் செய்ய முற்பட்டனர். இது அத்தர்மத்துக்கு இழைக்கும் நிபந்தனையாக இருந்ததால் அபயசுந்தர எதிர் அபயசுந்தர வழக்கில் இலங்கையின்

நிறைகுழாம் உச்ச நீதிமன்றம் மேற்படி பிரபுக்கள் சபை தீர்வைப் புறத்தொதுக்கி விவாகம் புரிந்துள்ள ஒரு இஸ்லாமியர் தனது முன்னய விவாகத்தை ரத்துச் செய்யாமல் மீண்டும் ஒரு விவாகம் செய்வது தவறு எனத் தீர்த்தது. இன்னுமொரு வழியில் கூறுவதால் மணத்திற்காக மதம் மாறுவது தடை செய்யப்பட்டது. இது வரவேற்கப்படக் கூடியதாகும். மதத்தை தமது சுயநலத்திற்காக பாவிக்க முடியாமல் தடை செய்தது. ஆயினும் இத்தீர்ப்புக்கு முன்னர் விவாகம் செய்தவர்கள் சட்ட விரோதமான காரியத்தை ஒவ்வொரு நாளும் செய்கிறார்களா? என்ற வினாவை எழுப்பக் கூடியநிலை காணப்படுகிறது.

இனி, இலங்கையிலுள்ள விவாகம் சம்பந்தமான சட்டங்களில் விவாக பொதுக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள ஒரு பிரிவான விவாகம் சம்பந்தமாக செய்யப்படும் ஒப்பந்தம் பற்றி பார்ப்போம்.

## விவாகம் சம்பந்தமாக செய்யப்படும் பொருத்தனைகள் Promise of Marrige

விவாகம் ஒன்று செய்வதற்கு தகுதியுள்ளவர்கள் தமது எதிர்கால விவாகம் பற்றிய பொருத்தனைகளை செய்து கொள்வதை உரோம டச்சுச் சட்டம் அங்கீகரிப்பதாக உரோம எழுத்தாளர்கள் தெரிவித்துள்ளனர். சட்டத்தால் தடுக்கப்படாதவர்கள், விவாக வயது வந்தவர்கள் இப் பொருத்தனைகளை செய்து கொள்ளலாம். விவாகப் பொருத்தனைகள் மீறப்பட்டால் அவர்கள் நிவாரணம் பெறலாம். பெற்றோரது அனுமதியில்லாமல் இள வயதினர் செய்து கொள்ளும் பொருத்தனைகள் செல்லாது. இலங்கையில் பெரும்பாலான விவாகங்கள் பெற்றோராலேயே தீர்மானிக்கப்படுகின்றன. திருமண அழைப்பிதழில் கூட பெற்றோர் திருமணத்தை நிச்சயித்திருப்பதாகவே கூறுகின்றனர்.

ஆகவே இலங்கையில் திருமணம் பெற்றோராலேயே நிச்சயிக்கப்படுகிறது. ஆகவே அவர்கள் தனது மகளுக்கு அல்லது மகனுக்கு திருமணம் சம்பந்தமான ஒப்பந்தத்தை செய்து கொள்ள முடியாது எனக் கூற முடியாது.

ஆனால் தென் ஆபிரிக்காவில் அவ்வாறு பெற்றோர் ஒப்பந்தம் செய்ய முடியாது என கூறப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் கூட இந்த விடயம் பிரச்சினையாக உள்ளது. ஏனெனில் விவாகம் செய்யப் போகிறவர்கள் இருவரும் பிரத்தியேகமாக பதிவாளரிடம் தான் இந்த விவாகத்திற்கு சம்மதம் தெரிவிப்பதாக கூற வேண்டும். ஆகவே தகப்பன் அல்லது தாய் தனது மகளுக்கு ஒரு மணவாளனை தெரிந்தெடுத்து அவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் பின்னர் மகள் அவனை மணக்க மறுத்தால் என்ன நடைபெறும் என பல வழக்குகளில் ஆராயப்பட்டது. தகப்பன் நட்ட ஈடு கட்ட வேண்டுமா? அப்படியானால் மகளது அனுமதியில்லாமல் தான் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒருதலைப்பட்ச ஒப்பந்தமாக கருதப்பட முடியாதா? என்ற பல வினாக்கள் வழக்குகளில் எழுந்துள்ளன.

இன்னுமொரு சுவையான வழக்கெழு வினா எழுந்தது.

விவாகமான ஒருவர் விவாகரத்து பெறமுன்பு மனைவியிடம் இருந்து பிரிந்து வாழும் போது அவருடன் விவாக ஒப்பந்தம் செய்யலாமா? என்ற வினா எழுந்தது.

இதற்கு விடை இல்லை என தீர்க்கப்பட்டது. இன்னுமொரு வினா என்னவெனில் விவாகப் பொருத்தனையில் ஈடுபட்டுள்ள ஒருவர் விவாகம் செய்தால் அவரை ஒப்பந்தப்படி மீண்டும் விவாகம் செய்ய கேட்கலாமா?என்பதேயாகும். இதற்கும் இல்லை என்றே பதில் கிடைத்தது.

ஆனால் அவர்கள் மீது வர்சனை வழக்கு போட்டு நட்ட ஈடு பெறலாம் எனத் தீர்க்கப்பட்டது. இத்தகைய ஒப்பந்தங்களின் எதிர்பார்ப்பு விவாகமே ஒழிய நட்ட ஈடு இல்லை என்பதால் இப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் பிரயோசனமற்ற ஒன்றாகவும் கருதப்படுகிறது.

இன்னுமொரு சிக்கலும் விவாகப் பொருந்தனையில் எழுகிறது. ஒரு ஆடவன் விவாக ஒப்பந்தத்தில் ஈடுபடும் போது அவன் தாம்பத்திய உறவுக்கு தகுதியுள்ளவன் என்று கருதப்பட்டே ஒப்பந்தத்தை செய்கின்றனர். ஆனால் பின்னர் அவன் தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாது எனக் கண்டால் அவனிடம் நட்ட ஈடு பெறலாமா? என்ற வினா எழுகிறது. சிலர் முடியும் என்பர். ஆனால் உண்மையில் அவனது உடல் நிலையில் பிழை இருப்பதால் அது ஆகாது என்று சிலர் கூறுவர். விவாகப் பொருத்தனைகளுக்கு பெண்களும் உட்படலாமா? என்ற வினா பிலிப் எதிர் வெத்தசிங்க 38NLR என்ற வழக்கில் எழுந்தது. பெண்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யலாம் எனத் தீர்க்கப்பட்டது.

இதுவரையும் பெற்றோர், வயது வராதோர், உடல் நலமற்றோர், பெண்கள் விவாக ஒப்பந்தம் செய்வதைப் பற்றிப்பார்த்தோம். இனி சகல தகுதிகளும் உடைய இருவர் விவாக ஒப்பந்தம் செய்து அது மீறப்படலாமா? அதன் விளைவுகள் என்ன எனப் பார்ப்போம்.

**விவாகப் பொருத்தனை ஒன்று வெற்றி பெற தேவையான நிபந்தனைகள்**

எமது நாட்டில் விவாகப் பொருத்தனை ஒன்று மீறப்பட்டால் அதற்கு நிவரணம் பெற வழக்குத்தாக்கல் செய்யப்பட வேண்டுமானால் தேவைப்படும் அம்சங்கள் என்ன எனப் பார்ப்போம்.

I.வழக்காளிக்கு எதிராளி விவாகப் பொருத்தனை ஒன்று அளித்திருந்தார் என்றும் அதனை எதிராளி மீறி விட்டார் என்றும் நிரூபிக்கப்பட வேண்டும். இந்த பொருத்தனையானது அவர்கள் இருவரும் பழகும் விதத்தில் இருந்து புரிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தாலும் அங்கு விவாகப் பொருத்தனை ஒன்று இருந்தது என்று கொள்ளலாம் என முத்துக்குடா எதிர் சுமணாவதி 65 NLR என்ற வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

II.ரோம டச்சுச் சட்டத்தின் கீழ் எழுத்தில் இல்லாமல் வாய்மூலம் விவாக ஒப்பந்தம் இருந்தாலும் வழக்கை தாக்கல் செய்யலாம். ஆனால் எமது நாட்டில் விவாகப் பொருத்தனை எழுத்தில் இருந்தால் மட்டுமே வழக்குத் தாக்கல் செய்யலாம்.

பொது திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விவாகப் பொருத்தனை மீறப்பட்டால் வழக்குத்தாக்கல் செய்யலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் எழுத்தில் அவ் ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது. பிரிவு 33 பொது திருமணக் கட்டளைச் சட்டம் ஆதாரம். ஆயினும் முத்துக்குடா எதிர் தமணாவதி வழக்கில் ஏற்று அவசியம் இல்லை என தீர்க்கப்பட்டது. பொருத்தத்தை ஏற்பு செய்ய வேண்டுமென்ற நிபந்தனையில்லை. செயல்கள் போதுமானது. ஆகவே ஒரு ஒப்பந்தத்தில் விவாக ஒப்பந்தம் இருந்ததா? எனப் பார்ப்பதற்கு பல நீதிமன்ற வழக்குகள் உதவுகின்றன.

**வழக்குகள்**

பிலிங் எதிர் வேதகன் என்ற வழக்கில் விவாகம் நடைபெறுகின்ற நாள் குறிக்கப்பட்டது. விவாக ஒப்பந்தம் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறது என தெரிவிக்கப்பட்டது.

குருவானவர் ஒருவர் முன்னிலையில் விவாக ஒப்பந்தத்தை எடுத்துக் கூறுகின்ற ஆவணத்தில் கையொப்பம் இடுவதும்

பின்னர் அந்த விவாகம் சமய ஆசாரப்படி நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதும் என ஏற்றுக்கொள்ளப்படுவது விவாகம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது என பெர்ணான்டோ எதிர் ஜோகின்ஸ் 30 NLR என்ற வழக்கில் தீர்க்கப்பட்டுள்ளது.

ஆயினும் விவாகப் பதிவாளருக்கு விவாகம் இன்னாருக்கும் இன்னாருக்குமிடையே நடைபெறவிருப்பதாக கொடுக்கப்படும் அறிவித்தல் விவாகப் பொருத்தனைக்குள் வராது (Giving Notice of Marriage) என மிசிநோனா எதிர் அர்குனாலிஸ் 17 NLR, அபிலினு ஹாமினே எதிர் அப்புஹாமி 21 NLR, வழக்குகளில் தீர்க்கப்பட்டது. இதற்கு காரணம் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுப்பது. அந்த விவாகத்திற்கு எதிர்ப்பு எதுவும் உண்டா என பார்ப்பதற்கே ஒழிய வேறு தேவைக்காக அல்ல என்று பொருள் கோடல் செய்யப்பட்டதாகும். ஆனால் முத்துக்குடா தமணாவதி வழக்கில் மேற்படி தீர்ப்புக்கு முரணாக பரந்த வரைவிலக்கணத்தின்டி அத்தகைய அறிவித்தலானது விவாக பொருத்தனைக்குள் வருகிறது எனப்பட்டது.

எதிராளியின் நடத்தையின் கீழ் விவாக பொருத்தனை தள்ளுபடி செய்யப்படலாம். பின்வரும் சந்தர்ப்பங்களிலும் விவாகப் பொருத்தனை ரத்துச் செய்யப்படலாம்.

1. இரு பகுதியாரின் ஒத்த விருப்பத்தின் பேரில்,

2. சுயவிருப்பத்தை தெரிவிக்க முடியாத சந்தர்ப்பங்களில், உதாரணமாக வஞ்சனையால் தகாத செல்வாக்கால் பலாத்காரமாய் பிழையாய் தான் விவாகப் பொருத்தத்திற்கு உட்பட்டதாக காட்டினால் அவ் ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம். ஆயினும் மேற்படி பாதுகாப்புகள் குறித்து சில சந்தர்ப்பங்களுக்கு

மட்டுமே பொருந்தும் என்பதை மறந்து விடக் கூடாது. சாதாரணமாக வழக்காளியின் பொருளாதார நிலை, குடும்பநிலை போன்றவற்றை தெரிந்து கொண்டதால் இவ் விவாக ஒப்பந்தத்தை நிராகரிகின்றேன் எனக் கூற முடியாது என Schnaar vs Jayasena 45 N.L.R. வழக்கில் உள்ளது.

3. விவாகம் ஒன்றுக்கு தடையுள்ள சில காரணங்களைக் கூறாமல் விட்டிருந்தால் அவற்றை அறிந்ததன் பின்னர் மேற்படி ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய தீர்மானித்ததாக கூறி ஒப்பந்தத்தை ரத்துச் செய்யலாம். உதாரணமாக: சிறு வயதிலிருந்தே உடலில் குறைபாடுகள் உள்ள ஒருவர் அதனை மறைத்து வைத்துள்ளது பின்னர் தெரியவந்ததால் ஆண்மையின்மை போன்றவை விவாக ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய உதவுகிறது.

4. எதிராளியால் கொடுக்கப்பட்ட விவாகப் பொருத்தனை திட்டவட்டமான பொருத்தனையாக இருக்க வேண்டும். உதாரணமாக: "நான் உன்னையே மணப்பேன் ஆனால் அப்பா அதற்கு உடன் பட மாட்டார்" என்று கூறியது அல்லது எழுதியதில் விவாகம் செய்வேன் என்பது திட்ட வட்டமாக இல்லாததால் அதனை மீளப்பெறலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே விவாக ஒப்பந்தம் ஒன்றை எதிராளி தந்தார் தற்போது அதனை மீறுகின்றார் என்பது திட்டவட்டமாக நிரூபிக்கப்பட வேண்டும். அப்போது தான் நிவாரணம் கிடைக்கும். எதிராளி வழங்கிய வாக்குறுதி திட்ட வட்டமாக விவாகம் செய்வதாக இருந்தது என நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும் அது எழுத்தில் இருக்க வேண்டும்.

### இழப்பீடு பெறும் வழக்குகள்

விவாகம் ஒன்று நின்றதால் வழக்காளியின் உள்ளம் ஆழாத் துயரத்தில் வீழ்ந்தது என்று கூறி (Injuria) இன்ஜுரியா வழக்கைத் தாக்கல் செய்யலாம் ஒப்பந்தம் மீறப்பட்டால் மட்டும் இன்ஜுரியா ஏற்பட்டது என்பதை விட அதன் மூலம் வழக்காளியின் மனம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது காட்டப்பட வேண்டும் என குகன்ஹய்ம் எதிர் றோசன் வம்மி வழக்கில் தீர்க்கப்பட்டது.

முத்துக்குடா எதிர் தமணாவதி வழக்கில் பின்வரும் நிகழ்வு இருந்தது. இந்த வழக்காளி தனது வழக்கில் இரண்டு வழக்கெழு காரணத்தை காட்டியிருந்தார்.

1. எதிராளி விவாக ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டார் என்பது.

2. மற்றையது வழக்காளி திருமண உடுப்பை உடுத்தி தனது உறவினருடன் விவாகப்பதிவாளர் காரியாலயத்திற்கு வந்திருந்தும் எதிராளி மணவாளனாக பதிவாளர் காரியாலயத்திற்கு வருகை தராததால் அவர்களுக்கு ஏற்பட்ட அவமானமாகும். இது இரண்டுக்கும் இழப்பீடு கோரியிருந்தார். நீதிமன்றம் இவ்விரண்டு வழக்கெழு காரணங்களுக்கும் இழப்பீடு பெறலாம் என்றது.

மேற்படி வழக்கில் இருந்து

I. விவாகப் பொருத்தனையில் இருந்து வெளியேறியமை.

II. அதனால் மனம் புண்பட்டு துக்கம் அவமானம் ஏற்படலாம் ஆகிய இரண்டுக்கும் இழப்பீடு பெறலாம் எனக் கூறப்பட்டாலும் பொது விவாகச் சட்டத்தின் கீழ் விவாகம் செய்வேன் என்ற ஒப்பந்தம் அல்லது பொருத்தனை எழுத்தில் இருக்க வேண்டும் என்று இருப்பதால் எழுத்தில்

பொருத்தனை இல்லாத சந்தர்ப்பத்தில் இழப்பீடு பெறமுடியாது என உதாலகம எதிர் போகங்கே, போகங்கே எதிர் உதாலகம வழக்குகளில் தீர்க்கப்பட்டது.

ஆயினும் விவாக பொருத்தனை அத்துடன் தொடர்பு உடைய அவமானம் ஆகியவற்றிற்கு இழப்பீடு பெற வேண்டுமானால் விவாகப் பொருத்தனை எழுத்தில் இருக்க வேண்டும் என்று கூறியபடி விவாகப் பொருத்தனை எழுத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில் மேற்படி இன்ஜுரியா வழக்குக்குத் தடையிருப்பது உண்மையே. ஆயினும் சாதாரணமான சிவில் வழக்கிற்கு தேவையான நிகழ்வுகள் மேற்படி பொருத்தனையிலும் அதன் பின்னர் நடந்த சம்பவங்களிலும் இருப்பதால் சிவில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்து இழப்பீட்டை பெறத்தடையில்லை என்பது சந்திரசேன எதிர் கருணாநிதி வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கூற வேண்டும். பரராஜசேகரம் எதிர் விஜயரத்னம் வழக்கில் நீதியரசர் வீரமந்திரி அவர்களின் தீர்ப்பு மேற்படி கூற்றுக்கு உரம் போடுகிறது எனலாம்.

## அன்பளிப்பு செய்யப்பட்ட பொருளை மீளப் பெறலாமா?

ஒருவர் மீது இன்னுமொருவர் அன்பு தனை மீறப்பட்டாலும் இங்கிலாந்தில் வழக்குத் தொடர முடியாது.ஆனால் ஒப்பந்தம் நிலவும் காலத்தில் அளிக்கப்பட்ட சொத்துக்களை மீளப் பெற வழியுள்ளது. Law Reform Miscellaneous Act And Mlr (1970)33 page 535-538 பார்க்கவும்.

## இலங்கையின் நிலைமை

இலங்கையின் சமூக கலாசார அமைப்பு இங்கிலாந்து மற்றும் மேலை நாட்டு சமூக அமைப்புக்களில் நின்றும் வேறுபட்டது. இலங்கையில் இன்னும் பெற்றோரின் சம்மதம் முக்கியமானதாக அமைகிறது. பெற்றோரே விவாகத்தை

முன்னின்று நடத்துகின்றனர். இளைஞனும் யுவதியும் காதலித்த போது அக்காதலை நிறைவேற்றி அவர்களை வாழ்வுக்குட்படுத்துவது இன்றும் பெற்றோரேயாகும். ஆகவே விவாகபொருத்தனை மீறப்பட்டால் அதற்கு நிவாரணம் பெற இலங்கையில் இடம் இருக்க வேண்டும்.

இலங்கையில் உள்ளவர்கள் காதலிக்கும் போது பல்வேறு வாக்குறுதிகளை அளிப்பது வழக்கம். ஆனால் அவற்றை அடிப்படையாகக் கொண்டு காதல் திருமணம் தடைப்பட்டாலும் நிவாரணம் பெற முடியாது. நிவாரணம் பெற வேண்டுமானால் காதல் வாக்கியங்கள் எழுத்தில் இருக்க வேண்டும். கண்ணே, மணியே, முத்தே என்று இருந்தால் மட்டும் போதாது. உறுதியான வாக்கியமாகவும் அது விவாகத்தில் உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும். அதுவும் எழுத்தில் இருக்க வேண்டும். எழுத்தில் இருக்கும் எல்லா வாக்கியங்களையும் நீதிமன்றம் ஏற்பதில்லை நீதிமன்றம் கொடுக்கும் வரைவிலக் கணத்திலேயே அது தங்கியுள்ளது. இவற்றை மனதில் கொண்டு இளைஞர் யுவதிகள் நடக்க வேண்டும் வாழ்வில் வெற்றி பெற வேண்டும்.

## முடிவுரை

இளைஞர்கள், யுவதிகள் தத்தமக்கு மனதிற்குப் பிடித்தமானவர்களை தெரிவு செய்து அவர்களுடன் பழகி பின்னர் அவர்கள் விவாகம் செய்து கொள்வது தீமையானதல்ல. ஆனால் அவர்கள் பெற்றோர்களது ஆசீர்வாதத்துடன் நடப்பது நன்று. எந்த பெற்றோரும் ஆரம்பத்தில் எதிர்ப்பை காட்டினாலும் இறுதியில் மனம் இளகி உங்களை ஆசீர்வதிப்பர் என்பது உண்மையே. ஆகவே அதனை நம்பி உங்களது நண்பர், நண்பிகளுடன் பழகும் போது அவர்கள் கூறுகின்ற வசனங்களையும் உறுதிமொழிகளையும் மட்டும் இலகுவில் நம்பக் கூடாது.

சினிமாவில் வரும் வசனங்களை கண்டு களிப்பது போல் இவர்களது வசனங்களையும் நம்பக் கூடாது. உண்மையான அன்பு உள்ளது என்று கண்டால் அதனை எழுத்தில் பெற வேண்டும். அந்த உறுதியும் நிபந்தனையுடன் ஆனதாக இருக்கக் கூடாது. அப்போது தான் நீதிமன்றம் சென்றாலும் உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். இலங்கையின் விவாகப் பொருத்தனை சட்டம் இதனையே கூறுகிறது.




மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்

இல 238, உட்துறைமுக வீதி

திருகோணமலை